விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 04 வியாழக்கிழமை (18.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 89

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## பிரதம நீதியரசர் தலைமையிலான குழு சனியன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நீதித்துறையில் பல்வேறு மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ள பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா தலைமையிலான நீதியரசர் குழு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றது.

மூன்று நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா தலைமையிலான குழுவில் நீதியரசர்களான கே.சிறிபவன், டி.ஜே.பி.ஈ.எஸ். பால பட்ட பெண்டி, ஜே.ஆர்.என்.காமினி அமரதுங்க ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்த விஜயத்தின் போது சனிக்கிழமை காலை யாழ்ப்பாண (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான 2ஆவது வழக்கு விசாரணையும் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீதான இரண்டாவது இராணுவ விசாரணை நேற்று ஆரம்பமானவுடன் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாயன்று முதல் விசாரணையும் இதேபோல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. முன்பு திட்டமிட்டிருந்ததுபோல இந்த இரண்டு இராணுவ விசாரணைகளையும் மூன்று மேஜர் ஜெனரல் அடங்கிய ஒரே இராணுவ நீதிபதிகள் குழுவே விசாரிப்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்தை தாங்கள் அறிய விரும்பியதாக இந்த நீதிபதிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் எதிர்ப்பை ஏற்க முடியாது; உரிய நேரத்தில் நிபுணர் குழு நியமிக்கப்படும்!

## ஐ.நா. செயலர் திட்டவட்டம்!

(கொழும்பு)

நிபுணர் குழுவை நியமிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. உரிய நேரத்தில் நிபுணர் குழு நியமிக்கப்படும் எனவும் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் செய்தியாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டுள்ளதாக ரொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்குடையது!

### ஜெனரல் பொன்சேகா சனல்-4க்கு தகவல்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சனல்-4 தொலைக்காட்சிக்கு விசேட செவ்வி ஒன்றை சிறையில் இருந்தவாறே வழங்கியுள்ளார். இதனை அவர் எழுதி சனல்-4 தொலைக் காட்சிசேவைக்கு அனுப்பியுள்ளார்.

என்மீது இரு குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. ஒன்று இராணுவத்திலிருந்த போது அரசியலில் ஈடுபட்டது. மற்றையது மருமகனுக்கு ஆயுதம் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை வழங்கியது.

ஜனாதிபதி மகிந்த எனது வாக்குகளைத் திருடி வெற்றியீட்டிய போதும் நானே அதிக வாக்குகள் பெற்றவன் என் (20ஆம் பக்கம் பார்க்க)

## தேடப்படுவோரின் பட்டியலில் பொட்டு

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவின்பொறுப்பாளர் பொட்டுஅம்மான் எனப்படும் சண்முகலிங்கம் சிவசங்கரனின் பெயர் மீண்டும் இன்ரபோல் பொலிஸாரின் தேடுவோர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் கடந்த மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்ற இறுதிக்கட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி அதிகாரப் பகிர்வு கிடைத்திருந்தால் நாட்டின் இன ஒற்றுமை வலுப் பெற்றிருக்கும்

### தேர்தல் பிரசாரத்தில் சம்பந்தன் உரை

(யாழ்ப்பாணம்)

எமக்கு ஒரு சமஷ்டி அதிகாரப்பகிர்வு மூலம் ஓர் ஆட்சி ஏற்பட்டிருந்தால் இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஓர் ஒற்றுமை ஏற்பட்டிருக்கும்.

அவ்வாறான ஆட்சி ஏற்படாத காரணத்தினால் அந்த ஒற்றுமை வலுப்பெறாமல்தகர்ந்தது. நாம் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக உரிமையுடன் பாதுகாப்பாக வாழ வேண்டுமாக இருந்தால் தமிழ் பேசும் மக்களிடையே ஓர் ஒற்றுமையை வளர்க்க வேண்டும். நாம் ஒற்றுமையாக ஒருமித்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால்தான் வடக்குக் கிழக்கினை ஒற்றுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியும்.

எதிர்வரும் காலத்தில் வடக்குக்கிழக்கு அரசியல் உரிமையை பொறுத்தவரையில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து செயற்படும் வகையான சூழலை ஏற்படுத்த முஸ்லிம்தலைவர்களுடன் ஓர் உறவுபாலத்தை ஏற்படுத்தி வருகின்றோம்.

நாம் வரலாற்று ரீதியான ஓர் தேசிய இனம். மொழி (19ஆம் பக்கம் பார்க்க)






# மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவுதொகை வழங்கல்

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கான 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு பதின்மூன்றாவது நாளாக பின்வரும் பிரதேச செயலக பிரிவுகளுக் குட்பட்ட குடும்பங்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை கீழ் குறிப்பிடப்படும் நேர அட்டவணையின் அடிப்படையில் அதற்கான அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள் ளன. கிராம சேவகர் பிரிவுகளும் அப்பிரிவுக ளில் வசிப்போர் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய இடங்களும் வருமாறு,

**சங்கானை பிரதேச செயலர் பிரிவு**

ஜே/157, ஜே/158, ஜே/159, ஜே/160, ஜே/161, ஜே/162, ஜே/163, ஜே/164, ஜே/165, ஜே/166, ஜே/167, ஜே/168, ஜே/169, ஜே/170, ஜே/171, ஜே/172, ஜே/173, ஜே/174, ஜே/175, ஜே/176, ஜே/177, ஜே/178, ஜே/179, ஜே/180,ஜே/181, காலை 9 மணி சங்கானை பிரதேச செயலர் அலுவலகம்.

**கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு**

ஜே/348, ஜே/349, ஜே/350, ஜே/351, ஜே/352, ஜே/353, ஜே/354, ஜே/355, ஜே/356 ஜே/357, ஜே/358, ஜே/359, ஜே/360, ஜே/361, ஜே/362, ஜே/363, ஜே/364, ஜே/365, ஜே/366, ஜே/367, ஜே/368, ஜே/369, ஜே/370, ஜே/371, ஜே/372, ஜே/373, ஜே/374, ஜே/375, ஜே/376, ஜே/377, ஜே/378, ஜே/379, ஜே/380, ஜே/381, ஜே/382, காலை 9 மணி கரவெட்டி பிரதேச செயலாளர் அலுவலகம்

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

ஜே/129, ஜே/130, ஜே/131, ஜே/132, ஜே/133,ஜே/134, ஜே/135, ஜே/136, ஜே/137, ஜே/138, ஜே/139,ஜே/140, ஜே/141,ஜே/142, ஜே/143, ஜே/144,ஜே/145, ஜே/146, ஜே/147, ஜே/148, ஜே/149, ஜே/150, ஜே/151, ஜே/152, ஜே/153,ஜே/154, ஜே/155, ஜே/156 காலை 9 மணி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மண்டபம். (ச-14)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செபமாலை மரியம்மா

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையாற்றும் செபமாலை காணிக்கைராசா அவர்களின் அன்புத் தாயார் திருமதி செபமாலை மரியம்மா 15.03.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்துக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை
கிளிநொச்சி

(903)



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way**
**French Classes**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு கலாசார, பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ALLIANCE FRANCAISE ஒரு மையமாகும்.

தொடர்ச்சியான கற்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக பரீட்சைகட்கும் மேலும் ஐரோப்பிய டிப்ளோமா பரீட்சையான DELF பரீட்சைக்கும் தோற்ற முடியும்.

விரிவுரையாளர்கள் : பிரான்ஸியரும் , பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(170)



## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

மாபெரும் பொதுக்கூட்டம்
(இலங்கை தமிழரசுக் கட்சி)

**காலம்: 18.03.2010 மாலை 4.30 மணி.**

**இடம்: தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடி, சுழிபுரம்.**

**பிரதான பேச்சாளர்கள்**

★ இரா.சம்பந்தன் (தலைவர், இலங்கை தமிழரசுக்கட்சி)
★ மாவை சேனாதிராஜா (வேட்பாளர், செயலாளர், இலங்கை தமிழரசுக்கட்சி)
★ Dr.ஜெயகுலராஜா (வேட்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,முல்லைத்தீவு)

மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர்கள்...!

அனைவரும் திரண்டு வருக! பேராதரவு தருக!!



தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

6

(ச-4591)


# மீள்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப்பிரிவில் கடந்த வருடம் பயிற்சி நெறியைப் பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கான சிங்களம், கணிதம் ஆகியவற்றுக்கான மீள் பரீட்சைகள் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் யா/நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க பாடசாலையில் நடைபெறும். காலை 9 மணிமுதல் 12 மணிவரையும் பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணிவரையும் நடைபெறும்.

ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டையின் பிரகாரம் பரீட்சார்த்திக ளைத்தோற்றுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ச)

# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

தேரடிச்சித்தர் தவத்திரு செல்லப்பா சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை இன்று வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவாலயத்தில் நடை பெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் நற்சிந்தனைப் பாடல்கள், பஜனைப்பாடல்கள் பாடப்பெற்று பகல் 11.30மணிக்கு விசேட பூசையும் தேரடியில் விசேட பூசை என்பன இடம்பெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும் (ச)


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

**அல்லலுற்ற தமிழருக்காய் அல்லும் பகலும் தனை அர்ப்பணித்து சேவையாற்றும்...**

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



X 1

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

மக்களுடன் மக்களாக நின்று நித்தம் மக்கள் பணியாற்றும் எங்கள் தோழர்களை ஆதரிப்பதன் மூலமே எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும்



K.N.டக்ளஸ் தேவானந்தா
9



கந்தசாமி கமலேந்திரன்
(தோழர் கமல்)
(தீவக அமைப்பாளர்)
6



சில்வெஸ்த்திரி-அலென்ரின்
(தோழர் உதயன்)
(அமைப்பாளர் யாழ். மாவட்டம்)
12

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

X

வெற்றிச் சின்னமாம் வெற்றிலை

புங்குடுதீவு ப.நோ.கூ.ச
தலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர், ஊழியர்கள்.

(ச-4582)



## யாழ் மாவட்டம் ஐக்கிய தேசியக் கட்சி - UNP



உண்மைகளுக்காய் உரமான
மகேஸ்வரனின் கனவை நனவாக்க
அவர் தம்பிக்கும் வாக்களிப்போம்

X



வெற்றி இலக்கம்

1

மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்

தியாகராஜா துவாரகேஸ்வரன்

(ச-4595)

# இன்று ஒரு தகவல்

## மூன்றாவது மனிதன்

ஒரு சமயம் ஒருத்தர் என்னைப் பார்த்து "நீ எத்தனை ஆள்?" என்று கேட்டார். நான் எனது இரண்டு பக்கமும் திரும்பிப் பார்த்து விட்டுச் சொன்னேன்.

"நான் ஓர் ஆள்தான்"

"அப்படிச் சொல்லாதே... நீ ஓர் ஆள் இல்லை மூன்று ஆள்"

"அது எப்படி?"

"உன்னைப்பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ... அது ஓர் ஆள். உன்னைப்பற்றி நான் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேனோ அது இன்னோர் ஆள். நம் இருவருக்கும் தெரியாமல் உனக்குள்ளே ஒருவன் இருக்கிறான் அது மூன்றாவது ஆள்"

"சரி நான் போய் விட்டு வருகிறேன் என்று அவசர அவ சரமாக அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டேன்.

சில நாட்கள் கழித்து அதற்கு அர்த்தம் தெரிகிற மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. கொஞ்சக்காலம் நான் மயிலாப்பூரில் குடியிருந்தேன். இரவில் கண்விழித்து ஏதாவது எழுதிக் கொண்டிருப்பேன். அந்தச் சமயத்தில் தூக்கம் வருவது போல் இருந்தால் வீட்டைவிட்டு வெளியே வந்து தேநீர்க் கடைக்குப் போய் தேநீர் குடித்து விட்டுத் திரும்பி வருவது வழக்கம். அப்படி ஒருநாள் நள்ளிரவு நான் தேநீர் குடித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த வேளையில் ஒருவர் அவசரமாக ஓடிவந்தார்.

"என்னங்க... ஏன் இப்படிப் பரக்கப் பரக்க ஓடி வருகிறீர்கள்?" என்றேன்.

"ஓர் ஆட்டோ வேண்டும். மிகவும் அவரசம்" என்றார் மூச்சு வாங்க.

"என்ன விடயம்?"

"எங்க பாட்டிக்கு உடம்பு சரியில்லை. அவசரமாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக வேண்டும்"

"எந்த ஆஸ்பத்திரிக்கு?"

"ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு"

"சரிவாங்க பார்க்கலாம். ஆட்டோ ஸ்ராண்ட் பக்கம் போனோம். அந்த நள்ளிரவு நேரத்தில் யாருமே இல்லை. ஓர் ஆட்டோவில் அதன் டிரைவர் தூங்கிக் கொண்டிருந்தார். அவரைத் தட்டி எழுப்பினோம். வேண்டா வெறுப்பாக முனகிக் கொண்டே எழுந்தார்."

"ஐயா ரொம்ப அவசரம்... ராயப்பேட்டை வரைக்கும் போக வேண்டும்"

"வேற யாரையாவது பாரு... போ! என்று சொல்லி விட்டு மறுபடியும் கண்ணை மூடினார்.

"வேறே யாரும் இல்லை. ரொம்ப அவசரம் எவ்வளவு வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளுங்கள்"

"இருநூறு ரூபா தருவீங்களா?"

சாதாரணமாக 25 ரூபாயில் போக வேண்டியதூரம்!

"இப்படியும் ஒரு மனுஷனா? என்று மனசுக்குள் வெறுப்பு. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்.

"சரி வாங்கிக் கொள்... வா" என்று அழைத்துக் கொண்டு போனோம். அப்படியும் முனகிக் கொண்டே வந்தார். பாட்டியை மெதுவாக ஆட்டோவில் ஏற்றி உட்கார வைத்தார்கள். ஆட்டோ பறந்தது.

போகும்போதே அந்த பாட்டியின் அவஸ்தையை அந்த டிரைவரும் உணர்ந்து கொண்டு தான் போனார்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரி...

பாட்டியை ஆட்டோவில் இருந்து இறக்கவும் மெல்ல நடத்தி உள்ளே கொண்டு போகவும் அந்த டிரைவரும் கை கொடுத்தார்.

உள்ளே கொண்டுபோய் விட்டு விட்டு வெளியே வந்தார். அந்தப் பாட்டியின் உறவினர் வெளியே வந்து டிரைவரிடம் ஏற்கனவே பேசியபடி இருநூறு ரூபாவை நீட்டினார்.

இப்போது அந்த டிரைவர் கையெடுத்துக் கும்பிட்டு "ஐயா எனக்கு பணம் வேண்டாம். இது நான் அந்தப் பாட்டிக்குச் செய்த உதவியாக இருக்கட்டும்!" என்று சொல்லிவிட்டு பதிலுக்குக் கூட காத்திருக்காமல் ஆட்டோவை எடுத்துக் கொண்டு போய்விட்டார். இந்தச் சம்பவத்தை நான் அதன் பிறகு சிந்தித்துப் பார்த்தேன். இப்போது எனக்கு அந்த மூன்று மனிதர்களை அடையாளம் தெரிந்தது.

"200 ரூபா கொடுத்தால் தான் வருவேன்" என்று சொன்னானே அவன் முதல் ஆள்.

"இப்படியும் ஒரு மனுஷனா?" என்று நினைத்தோமே அது இரண்டாவது ஆள்.

உண்மையான அந்த மூன்றாவது மனிதன் ராயப்பேட்டையில் தான் வெளியே வந்தான்.

நம் ஒவ்வொருவரிடமும் அந்த மூன்றாவது மனிதன் இருக்கிறான். அவனை அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது.

அதாவது பல சந்தர்ப்பங்களில் அந்த முதல் மனிதனையே நமக்கு அடையாளம் தெரியாமல் போய் விடுகிறது.

எப்படி என்கிறீர்களா? இதைக் கேளுங்கள். ஒரு நாள் நள்ளிரவு நேரம். இரண்டு நண்பர்கள் காரில் வந்து கொண்டிருந்தார்கள்.

"டேய்... ராத்திரி நேரம் காரைப் பார்த்து ஓட்டு" என்கிறான் ஒருவன்.

"அடுத்தவன் உடனே பதற்றத்தோடு சொல்லுகிறான். அடப்பாவி! இப்ப காரை ஓட்டிக் கொண்டிருக்கிறது நீதானே!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### தாய்லாந்து உணவுக் கண்காட்சிக்கு

# யாழ் மாவட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தாய்லாந்தில் எதிர்வரும் மே மாதம் 12 தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 2010 ஆம் ஆண்டிற்கான ஆசியாவின் உணவுக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் உணவு உற்பத்தி முயற்சியில் ஈடுபடுபவர்களிடமிருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இக் கண்காட்சியில் பங்குபற்றுபவர்கள் விவசாய உற்பத்தி, உணவு உற்பத்தி, கடலுணவு உற்பத்தி, உணவுப் பானம் மற்றும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், மூலப் பொருள் உற்பத்தி என்பனவற்றை மேற்கொண்டிருத்தல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீன உணவுப் பதனிடல், தரக் கட்டுப்பாட்டு முறைகளை அவதானித்தல், புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளுதல், தெற்காசிய பிராந்தியத்தில் சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியனவே இக் கண்காட்சி நடத்தப்படுவதன் முக்கிய நோக்கமாகும்.

பயணம் செல்ல விமானக் கட்டணத்திற்கும் உட்போக்குவரத்திற்குமாக 50 வீத செலவினங்களை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பொறுப்பேற்கும். அத்துடன் உற்பத்தியாளர்களின் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதி வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படவுள்ளது.

பங்குபற்றியவர்கள் யாழ். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி சபையிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை கையளிக்குமாறு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-30)

# உணவு விஷமாகியதில் பாதிக்கப்பட்ட 150பேர் வைத்தியசாலைகளில் அனுமதி

(கொழும்பு)

உணவு விஷமானதால் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் சுமார் 150 பெண் ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டுள்ள னர். இவர்கள் தொம்பே, பியகம உள்ளிட்ட சில வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதிய உணவை உட்கொண்டதன் பின்னர் இவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் பிரஷாந்த ஜெயக் கொடி தெரிவித்தார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக் கப்பட்டோரில் அனேக மானோர் சிகிச்சைகளின் பின்னர் வெளியேறியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த உணவின் மாதிரிகள் பியகம பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினார். (ஓ-6)

# ஸ்ரீலங்கா ஒற்றுமை சுற்றுலா யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ரைடர் மிதிவெண்டி நிறுவனத்தின் சார்பில் 'ஸ்ரீ லங்கா ஒற்றுமை சுற்றுலா இளைஞர்களுக்கான நாளை' எனும் தொனிப் பொருளில் திறந்த மற்றும் 19 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான மிதி வண்டி ஓட்ட நிகழ்வினை நேற்றுக் காலை 7.30 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும் ஆரம்பித்து வைத்தனர்.

மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்த அமைச்சரும் ஆளுநரும் அதன் பின்னர் மிதி வண்டிகளில் ஏறி சுமார் 200 மீற்றர் தூரம் வரை சென்று மேற்படி மிதிவண்டி ஓட்டப் போட்டிக்கு உணர்வளித்தனர்.

இதன் பின்னர் போட்டியை அமைச்சர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்ததுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த இலங்கைப் படத்தைக் கொண்ட பதாகையில் கையொப்பமிட்டதைத் தொடர்ந்து ஆளுநரும் யாழ் மாநகர முதல்வரும் கையெழுத்திட்டனர்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர், வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோன், பிரிகேடியர். சரத் விஜேசிங்க, யாழ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அஜித் சமரக்கோன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஓ-6)

# இராசி பலன்

*18-03-2010*
*(பங்குனி 4 , வியாழக்கிழமை)*
*திருதியை பின்னிரவு 5.28 மணிவரை*
*ரேவதி முற்பகல் 10.11 மணிவரை*
*இராகுகாலம் 1.49 - 3.19 மணிவரை*
*சுபநேரம் 7.49- 9.19 மணிவரை*
*இணுவில் சிவகாமியம்மை, மாதகல் பாணாக வெட்டி அம்மை கொடி, கரவெட்டி மேற்கு ஞானவைரவர் தேர், செல்லப்பா சுவாமிகள் குருபூசை, சித்தாமிர்தம்.*

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, தொழிலில் ஆர்வம், கற்பனை மிகுதி, நல்ல முயற்சி. |
| இடபம் | சுபசெலவு, சயனசுகக்குறைவு, செய்தொழில் மேன்மை, பெரியோர் சந்திப்பு. |
| மிதுனம் | குடும்ப சுகம்,தனதானிய சேர்க்கை, எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி. |
| கடகம் | அதிகாரம், இனிய தகவல், நண்பர்கள் உதவி, ஆரோக்கிய நிலை. |
| சிங்கம் | தொழில் கஷ்டம், எதிர்பாராத செலவு, பிரயாண நன்மை, பெரியோர் வெறுப்பு. |
| கன்னி | எதிர்பாராத பகை, காரிய தாமதம், மரியாதைக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| துலாம் | எடுத்த கருமங்கள் நிறைவேறும், தொழில் நன்மை, அபூர்வ சந்திப்பு, போசன சுகம். |
| விருச்சிகம் | பணவருவாய், திடீர் பயணம், உற்சாகம், போசன நன்மை. |
| தனுசு | காரிய இடையூறு, பணக்குறைவு, புத்திரரால் கவலை, ரோகநிலை. |
| மகரம் | இனிய சம்பவம், கல்வியில் ஆர்வம், சுபசெலவு, பயந்த சுபாவம். |
| கும்பம் | அந்நியர் சந்திப்பு, அதிக பிரயாசை, பிரயாண சுகம், பண வருவாய். |
| மீனம் | சிந்தனை மிகுதி, முயற்சி தாமதம், அதிக செலவு, உஷ்ண வியாதி. |


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 120 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 80 |
| லீக்ஸ் | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 240 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 70 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 90 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |
















அரங்க நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.மாணிக்கராஜா, யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப் பாளர் பி.குகதாஸன் ஆகியோர் உரையாற்று வதையும் நிகழ் வில்கலந்துகொண்ட ஒருபகுதியினரையும்படங்களில்காணலாம்.



திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் வடக்கின் வசந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிப தலைமையில் இடம்பெற் றது. இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக் ளஸ் தேவானந்தா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், மாகாணப் பணிப்பாளர் வீ.இராசையா, யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம், பாட சாலை பொறியியலாளர் எஸ்.சிவபாலன் ஆகியோர் பாடசாலை சமூகத்தால் அழைத்துச் செல்லப் படுவதையும் விருந்தினர்கள் நிகழ்வில் கலந்து கொண் டுள்ளதையும் ஆளுநர் உரையாற்று வதையும் பாடசாலை பதிவேட்டில் அமைச்சர் கையொப்பம் இடுவதையும் படங் களில் காணலாம்.

# தேர்தல் முறையை முழுமையாக மாற்றியமைக்க ஜனாதிபதி தயார்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள தேர் தல் முறையை முழுமையாக மாற்றியமைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருப்பதாக வர்த்தகம் விற்பனை அபிவி ருத்தி மற்றும் நுகர்வோர் விவகார அமைச் சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அதற்காக வேண்டி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான பாராளு மன்றத் தெரிவுக்குழு ஒன்றும் நியமிக்கப் பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் தேர்தலின் போது தொகுதி வாரியாக மக்களுக்கு நெருக்கமான வர்களை தெரிவு செய்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

தற்போது விருப்பு வாக்கு முறையால் கொலைசெய்யும் அளவுக்கு வன்முறைகள் இடம்பெறும் நிலை ஏற்படுகிறது. உரிய அனு பவமுள்ள அறிவாற்றல் உள்ள தலைவர் களையே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யவேண்டும்.

இதற்காக தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைக்க பாராளுமன்றத்தில் மூன் றில் இரண்டு அதிகப் பெரும்பான்மை அதி காரம் உள்ளதாக இருக்க வேண்டும் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஓ-6)

## குருபூசைத்தின பண்ணிசைப் பாராயணம்

நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமி களின் 95ஆவது குருபூசை வைபவத்தில் சுவாமிகளின் நினைவாலயத்தில் அகில இலங் கைத் திருமுறை மன்றம் நடாத்தும் பண் ணிசை வகுப்பு மாணவர்களின் பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று வியாழக் கிழமை காலை 8 மணிமுதல் குருபூசையை யொட்டி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து யோகர்சுவாமி களின் நற்சிந்தனைப் பாடல், பாராயணம் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெற விழா இனிதே நிறைவேறும். (6)

# த.தே.கூ.வன்னிமாவட்ட வேட்பாளர்கள் அறிமுகம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர்களின் அறிமுகமும், பிரசாரக்கூட்டமும் நேற்று முன்தினம் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோதராதலிங்கம் தலைமையில் இடம்பெற் றது.

மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் த.தே.கூ.நாடாளு மன்றக் குழுத்தலைவர் ஆர்.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவைசேனாதிராசா,டெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி. ஆர்.எல்.எப் அமைப்பின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வேட்பா ளர்களான சூசைதாசன்,டாக்டர் ஜெயகுல ராஜா, செல்லத்துரை, சட்டத்தரணி சிராய்வா ஆகியோர் அறிமுகம் செய்து வைக்கப்பட் டனர். (ஓ-6)

## வேலணைப் பகுதி நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் விலங்கு நோய் தடுப்பு பிரிவினரால் வேலணைப் பகுதியில் வீடுவீடாக சென்று வளர்ப்பு நாய் களுக்கு நீர்வெறுப்பு (ARV) நோய் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நடைபெற்று வருவதாக விலங்கு விசர் நோய் தடுப்பு பிரிவினர் தெரி விக்கின்றனர்.

இதனை அனைத்துக் குடியிருப்பாளர் களும் கவனத்திலெடுத்து தமது வளர்ப்புப் பிராணியான நாய்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றுமாறு வேண்டப்படுகின்றனர். (ஓ-22)

# இலங்கை திறந்த பல்கலையின் கிளை களுத்துறையில் திறந்துவைப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் களுத்துறை கிளை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவினால் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

45 மில்லியன் ரூபா செலவில் இரு மாடி களைக் கொண்டதாக இப் பல்கலைக்கழக கிளை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இணையத்தளம் ஊடாகக் கல்விகற்கும் வசதிக்கூடம் இக் கிளை உள்ளடக்கியுள்ளது.

இப்பல்கலைக்கழக இணை தகவல் நிலையமொன்றையும் கொண்டிருக்கின்றது. நாவலையிலுள்ள திறந்த பல்கலைக்கழ கத்தில் கற்பதற்கு இப்பல்கலைக்கழக கிளை யில் பதிவு செய்யவும் வசதி செய்யப்பட் டுள்ளது. (6)

# கல்விமாணி மாணவ பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விமாணி மாணவர் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கல்விமானி இரண்டாம் வருட மாணவர் மன்ற பிரதிநிதி களையும் முதலாம் வருட மாணவ தலைவர் களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் நாளை மறுதினம் சனிக்கிழமை சகல முதலாம்,இரண்டாம் வருட மாணவர் களை யாழ் தேசிய கல்வியற் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவகத் தின் இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந் திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (6-4)

# பங்குனி மாதப் பலன்கள்

## துலாம்

*(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள் வரை)*

*நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் ராசி நேயர்களே!*

பங்குனிமாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்ரன் மாதத் தொடக்கத்தில் உச்சம் பெற்று, இலாபாதிபதியுடனும், விரயாதிபதியுடனும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே, வரவும் -செலவும் சமமாக இருக்கும் என்றாலும், வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். தொழில், உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு, அது தானாகவே வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 4,5 க்கு அதிபதியான சனிபகவான் வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால், உறவினர்கள் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். பிள்ளைகள் நல்ல காரியம் நடைபெற ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஏழரைச் சனியில் விரயச்சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது.

அதிலும் வக்ர இயக்கமாக நடைபெறுகிறது. எனவே, பயணங்களில் கவனம் தேவை. வாகன பழுதுச் செலவுகள் உருவாகலாம்.

வெளியூர் தொடர்பான பயணங்கள் அதிகரிக்கும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்து பேசுபவர்களின் எண்ணிக்கை கூடும். நாட்பட்ட வியாதிகளை கவனித்துக் கொள்வது நல்லது. வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது எதிரிகளின் குறுக்கீடுகள் வந்து சேரலாம். இதுபோன்ற நேரங்களில் வைரவர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. பகையை வெல்லும் ஆற்றல் வைரவர் வழிபாட்டிற்கு உண்டு.

தேய்பிறை அஷ்டமியில் முறையாக வழிபாடு செய்தால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை பாதை அமையும். தனாதிபதி செவ்வாய் நீச்சம் பெற்றுள்ளதால், ஒருதொகை செலவழிந்த பிறகே மற்றொரு தொகை வந்து சேரலாம். சதமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், குடும்பத்தில் உள்ளவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

மார்ச் 28 ஆம் திகதி இராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும்விளங்கும் சுக்ரனுடன் 9,12க்கு அதிபதியான புதன்இணைந்து சதமஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் புத -சுக்ர யோகம் செயல்படப்போகிறது. எனவே, கனவுகள் நனவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடம்பரப் பொருட்கள் முதல் அத்தியாவசியப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்ப்பீர்கள்.

குருவின் பார்வை பலத்தால் மனக் குழப்பங்கள் அகலும். மதிநுட்பத்தோடு செயல்பட்டு சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பழைய வாகனத்தை புதுப்பிக்கும் எண்ணம் மேலோங்கும். ஒரு சிலர் புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வர். அந்நிய தேசத் தொடர்பு அமைபவர்கள், தெசாபுத்தியை பொருத்தும், சனியின் ஆதிக்கத்தை பொருத்தும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது நல்லது.

சனி வக்ர நிவர்த்தியான பிறகு எதையும் நம்பிச் செயல்படலாம். தந்தை வழியில் உள்ள சொத்துக்களால் ஏற்பட்ட தகராறுகள் மாறும்.பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணைவர். கல்யாண வாய்ப்புக்கள் கதவைத் தட்டும். காது குத்துதல் முதல் மணிவிழா வரை ஏதேனும் ஒரு சுபச் செலவு இல்லத்தில் நடைபெறலாம். ஏழரைச் சனி நடைபெறும் பொழுது நல்ல விரயங்களை மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் வெள்ளிக்கிழமை விநாயகரையும், சனிக்கிழமை அனுமானையும் வழிபட்டு வாருங்கள். தெய்வநம்பிக்கை திருப்தியான வாழ்க்கையை வழங்கும்.

## விருச்சிகம்

*(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)*

*உதவும் குணத்தால் உள்ளங்கள் அனைத்திலும் இடம்பிடிக்கும் விருச்சிக ராசி நேயர்களே!*

பங்குனிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் செவ்வாய் வக்ர நிவர்த்தியாகி விட்டதால் வளர்ச்சி கூடும்.

வருமானம் திருப்தி தரும். ஆரோக்கிய பாதிப்புக்கள் அகன்று, அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். வாக்கு ஸ்தானத்தில் இராகுபலம் பெற்றிருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

அடுத்தடுத்து நல்ல காரியங்கள் நடைபெறுவதைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். நான்காமிடத்தில் 2,5க்கு அதிபதியான குருவும், ஒன்பதுக்கு அதிபதியான சந்திரனும் இணைந்து மாதம் தொடங்குவதால், வீடு கட்டும் வாய்ப்புகளோ, வீடு வாங்கும் வாய்ப்புகளோ வந்து சேரலாம். எந்தத் திசை பார்த்து வாசல் இருந்தால்,எப்படிப்பட்ட பலன் தரும் என்பதை அறிந்து வாங்கினால் வருமானமும் திருப்தி வரும். வருங்காலமும் சிறப்பாக இருக்கும்.

புத -சுக்கிர யோகம் செயல்படும் நேரமிது. எனவே, நகைகள், புதிய தனக் கருவிகள் , மின்சாதனங்கள் போன்றவற்றை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டாகும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வீக ஆற்றல் உங்களுக்குள் இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால், உடன் பிறப்புக்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அதிகமாகப் பெற முடியும். விநாயகப் பெருமானையும், துர்க்கை அம்மனையும் விடாது வழிபட்டு வாருங்கள்.வெற்றி உங்க ளை நோக்கி வந்து சேரும். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு நீங்கள் நினைத்ததெல் லாம் நடைபெறப்போகிறது. நினைக்க இயலாத இராஜயோகம் உங்களைத் தேடி வரப் போகிறது.

மார்ச் 28 ஆம் திகதி மேட இராசியில் புதனும் சுக்கிரனும் இணைகிறார்கள். பன்னிரண்டுக்கு அதிபதியும் எட்டுக்கு அதிபதியும் ஆறில் ஒன்று கூடும்போது விபரீத இராஜ யோகம் செயல்படுமல்லவா?

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றிகிடைக்கும்.திடீர் தன இலாபங்கள் வந்துசேரும். கட்டளைக்கு அடிபணிபவர்களில் ஒருசிலரை மாற்றம் செய்வீர்கள். கல்யாண வாய்ப்புக்கள் கை கூடும்.

வீடு,இடம் வாங்க முதலீடு செய்யலாமா என்ற சிந்தனைக்கு வெற்றி கிடைக்கும் நேரமிது. உலாவரும் கிரகங்கள் சாதகமாக இருப்பதால் ஒவ்வொரு நாளும் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

### சிவஸ்ரீ சிங்காரம்

பயணங்கள் அதிகரிக்கும். அதன்விளைவாக நல்ல பலன்களும் கிடைக்கும். பெண்களால் பெருமை தரத்தக்க செய்தி ஒன்று வந்துசேரும். பிறர் போற்றும் அளவுக்கு வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் கண்ட கனவு நனவாகும் மாதமிது.

அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் வந்துசேரலாம்.புதிய பதவிகள் வந்து பூரிப்படைய வைக்கப் போகின்றது. வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். இன்பங்கள் இல்லம் வந்து சேரும். (தொடரும்)

# நாட்டின் நீதித்துறையை யாரும் சவாலுக்குட்படுத்த முடியாது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு) எமது நாட்டின் நீதித்துறையையாரும் கேள்விக்குட்படுத் தவோ சவாலுக்கு உட்படுத்தவோ முடியாது. இராணுவ சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சார்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சரத்பொன்சேகாவின் கைது அரசியலமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பிரகடனம் போன்ற விடயங்களை மீறுவதாக முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் கூறினார். இவ்விடயம் குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது,

இராணுவ சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் சரத்பொன்சேகா சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இந்நிலையில் அவரின் கைதானது மனித உரிமை மீறல் என்று எவ்வாறு கூற முடியும்? இது அடிப்படையற்ற விடய மாகும். எமது நாட்டில் சிறந்த நீதித்துறை காணப்படுகின்றது. வலுவான சட்டக்கட்டமைப்பு உள்ளது. அதனை யாராலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. (ஓ-6)

# நாட்டின் தற்போதைய சட்டங்கள் மக்களின் நலன் கருதி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க



நாட்டின் தற்போதைய சட்டங்கள் மக்களின் நலனுக்காகவே நடைமுறைப்படுத்த வேண்டும் என பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். ஹொரணையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹொரண அடவாங்கொட ஆரம்பப் பாடசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணனிப் பிரிவை ஆரம்பித்து வைக்கும் வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் , நகரப்புறப் பாடசாலைகளுக்கு கிடைக்கும் வளங்கள் போன்று கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் கிடைக்கச் செய்வது எமது கடமை எனத் தெரிவித்துள்ளார்.

சிறந்த கல்வி கிடைக்கவேண்டும் என்றால் நகரத்துக்கு செல்லவேண்டிய நிலைமை மாற்றப்பட்டு கிராமப்புறங்களிலும் சிறப்பான கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கிராமப்புறங்களையும் மாற்றி அமைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இராணுவ நீதிமன்றில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றன

## சனல் 4 ஊடகத்துக்கு பொன்சேகா செவ்வி

கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா , சர்ச்சைக்குரிய சனல் 4 ஊடகத்திற்கு செவ்வியளித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சனல் 4 ஊடகத்திற்கு பொன்சேகா தனது சொந்தக் கையெழுத்தில் தகவல்களை அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணுவ நீதிமன்றில் தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் ஆளும் கட்சி தம்மீது கொண்ட பொறாமையினால் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் அதிகளவான வாக்குகளைப் பெற்றுக் கொண்டதாகவும் , ஊழல் மோசடிகளின் மூலமாகவே தாம் தோல்வியடைய நேரிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வாதிகார போக்கில் ஆட்சி நடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளித்த முன்னாள் இராணுவ அதிகாரி கைது

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவாகச் செயற்பட்ட முன்னாள் உயர் இராணுவ அதிகாரியொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜெனரல் சரத்பொன்சேகாவின் இணைப்புச் செயலாளராக குறித்த அதிகாரி செயற்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

ஹோமகம கலவிலவத்தைப் பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுனில் டி சில்வா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அரச விரோத சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# புதிரான பைல் எக்ஸ்டன்ஷன் பெயர்

நாம் எண்ணிப் பார்க்க இயலாத எண்ணிக்கையில் கணனி பைல்களுக்கான எக்ஸ்டென்ஷன் பெயர்கள் இருக்கும். பொதுவாகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் பைல் வடிவங்கள் குறித்து நாம் அறிவோம். அவ்வளவாகப் பயன்படுத்தப்படாத ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்த சிலரால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற பைல்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள வழி உள்ளதா?

இதற்கு அழகான, பயனுள்ள ஓர் தளம் நம் கண்ணில் பட்டது. அந்தத் தளம் குறித்துக் காணலாம்.

கணனிகளின் பயன்பாடும், அதில் பயன்படுத்தப்படும் பைல்களின் வகையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வந்தாலும், பைல்களின் பெயர் வகைகளைத்




## இவ்வார இணையத்தளம்

தெரிந்து கொள்ளக்கூடிய வழிகள் எப்போதுமே எளிதே. .jpeg, .gif, html and.doc. போன்ற பெயர்களை நாம் நன்கு அறிவோம். ஆனால் .bat,.otf, .xml or.sqm போன்ற பெயர்கள் உள்ள பைல் களைப் பெறும் போதோ அல்லது அவை குறித்துப் படிக்கும் போதோ சற்று தடுமாறுவோம். இவை குறித்து அறிந்து கொள்ளhttp://www.fileextensions.org/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லுங்கள்.

தேடல் இஞ்சின் மூலம் நீங்கள் அறியாத பைல் எக்ஸ்டென்ஷன் பெயரைத் தேடினால் இந்த தளத்தைத்தான் முதன்மைத் தளமாகக் காட்டும். அல்லது இந்தத் தளத்தில் தரப்பட்டுள்ள அகரவரிசையில் நீங்கள் தேடும் பைல் எக்ஸ்டன்ஷன் என்ன எழுத்தில் தொடங்குகிறதோ அதனைக் கொடுத்து அறியலாம்.

இங்கு பைல் எக்ஸ்டன்ஷன் குறித்து தகவல் கொடுப்பதுடன் அந்த பைலை எந்த புரோகிராம் இயக்கும், அது எங்கே கிடைக்கும் என்ற விபரமும் தரப்படுகிறது. சில வேளைகளில் அந்த புரோகிராம் பெறுவதற்கான லிங்க் இங்கு தரப்படுகிறது. எடுத்துக்காட்டாக .rar என்ற துணைப்பெயர் கொண்ட பைல் ஒன்று நான் கேம்ஸ் விளையாடப் பயன்படுத்த வேண்டியதாயிருந்தது. இந்த தளம் சென்ற போது இந்த துணைப் பெயர் கொண்ட பைலை Win RAR என்ற புரோகிராம் இயக்கும் என்ற தகவல் முதலில் கிடைத்தது. அத்துடன் இந்தப் பெயர் கொண்ட பைல்கள் .zip பைல்களைப் போலச் சுருக்கப்பட்ட பைல்கள் என்ற தகவலும் கிடைத்தது.

இந்த தளத்தின் பக்கங்களில் இரு மெனுக்கள் தரப்பட்டுள்ளன. இந்த தளத்தில் அடிக்கடி தெளிவு பெறும் பைல்களில் துணைப் பெயர்கள் மற்றும் பொதுவான பைல்களின் துணைப் பெயர்கள் (Most Visited File Extensions and Common File Extensions) என இருவகைகள் தரப்பட்டுள்ளன. .rarகுறித்துப் பார்க்கும் போது அடிக்கடி தெளிவு பெறத் தகவல் தேடப்படும் பைல் பெயர்கள் பட்டியலில் இது எட்டாவது இடத்தைப் பெற்றிருந்தது.(நமக்கு மட்டுமல்ல பலருக்கும் .rar பைல் பெயர் குறித்து சந்தேகம் வந்துள்ளது என்று திருப்திபட்டுக் கொண்டேன்.)

பொதுவான பைல்களின் துணைப் பெயர்கள் பிரிவில் நாம் அடிக்கடி பயன்படுத்தும் பைல்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றையும் பார்த்து நாம் பயன்படுத்தும் பைல்களின் தன்மை குறித்து கூடுதல் தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம். இனிமேல் எந்த பைல் துணைப் பெயரும் உங்களைப் பயமுறுத்தாது, இல்லையா!




# பிரவுசருக்குள் பிரவுசர்



ஒரு பிரவுசரில் இன்டர்நெட் வெப்சைட் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிருக்கிறீர்கள். இந்தத் தளத்தை வேறு ஒரு பிரவுசரில் பார்த்தால் இன்னும் சிறப்பாக நன்றாக இருக்குமோ என்று எண்ணுகிறீர்கள். உடனே என்ன செய்வீர்கள்? அந்த பிரவுசரை விட்டு விலகி அடுத்த பிரவுசரை இயக்கி குறிப்பிட்ட தளத்தின் முகவரியினை அமைத்து இயங்கிப் பார்ப்பீர்கள்.


இதற்குப் பதிலாக அதே பிரவுசரில் ஒரு ஐகனை அழுத்துவதன் மூலம் மற்ற பிரவுசர்கள் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.இந்த வசதி பயர்பொக்ஸ் பிரவுசரில் உள்ளது. ஆம் பயர்பொக்ஸ் பிரவுசர் சார்ந்த அட்ஓன் தொகுப்புகளில் பயர்பொக்ஸ் பிரவுசரில் இருக்கையில் குரோம், இன்டர்நெட் எக்ஸ்புளோரர், ஒப்பரா மற்றும் சபாரி பிரவுசர்களை இயக்க வழிதரும் ஆட் ஓன் தொகுப்புகள் உள்ளன.

கூகுள் குரோம் தொகுப்பிற்கான ஆட் ஓன் புரோகிராம் https://addons.mozilla.org/en US/firefox/addon/8740? src= oftenused with என்ற முகவரியிலும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசருக்கானது https://addons.mozilla.org/en US/firefox/addon/1429?src= often used with என்ற முகவரியிலும் சபாரிக்கான புரோகிராம் https://addons.mozilla.org/en US/firefox/addon/6438?src= often used with என்ற முகவரியிலும் ஒப்பராவிற்கான புரோகிராம் https://addons.mozilla.org/en US/firefox/addon/1190? src= oftenused with என்ற முக்வரியிலும் கிடைக்கின்றன.

தேவைப்படும் பிரவுசருக்கான ஆட் ஓன் புரோகிராமில் கிளிக் செய்து பின் add to firefox என்ற பட்டனை அழுத்திவிட்டால் அதற்கான புரோகிராம் இணைந்து விடும்.

பின் மீண்டும் பயர்பொக்ஸை இயங்கி ஏதேனும் ஓர் இணையத்தளத்தி னைப் பார்க்கையில் ரைட் கிளிக் செய்தால் view this page in....என குறிப்பிட்ட அந்த பிரவுசரின் பெயர் கிடைக்கும். அதில் கிளிக் செய்தால் உடன் அந்த பிரவுசர் திறக்கப்பட்டு குறிப்பிட்ட அந்த தளம் அதில் காட்டப்படும்.

# அதிவேக ஒப்பரா பிரவுசர் வெளியீடு




விண்டோஸ் இயக்கத்தில் இயங்குவதில் இது தான் அதி வேக பிரவுசர் என்ற அடை மொழி யுடன் களத்தில் இறக்கப்பட்டுள்ளது ஒப்பரா பிரவுசர் பதிப்பு 10.50 http://www.opera.com/ என்ற ஒப்பராவின் தளத்தில் இதனை டவுண்லோட் செய்திடலாம். இதில் தரப்படும் ஜாவா ஸ்கிரப்ட் இஞ்சின் மற்றும் கிரா பிக்ஸ் லைப்ரரி இரண்டும் வேகத் திற்கு ஈடுகொடுக்கும் வகையில் புதுமையானவையாகும்.

இதனைப் பயன்படுத்துபவர்கள் , எந்த இணையத்தளத்திற்கும் காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. இதன் வடிவமைப்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அத்துடன் தற்போது மற்ற பிரவுசர்களில் அமைந்திருக்கும் பிரைவேட் பிரவுசிங் வசதியும் தரப்பட்டுள்ளது. வழக்கமான மெனு பாருக்குப் பதிலாக ரேடியோ பட்டன் தரப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு புள்ளியை அழுத்துவதன்மூலம் , ஒப்பரா தரும் அனைத்து வசதிகளையும் பார்த்து அறியலாம். புதிய தொழில்நுட்பம் முழுவதையும் இது சப்போர்ட் செய்வதால் , கண்களைக் கவரும் வகையில் இணையத் தளங்களை அமைப்பவர்கள், இந்த பிரவசரில் அவை நன்றாகக் காட்டப்படும் என நம்பி அமைக்கலாம். விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 தொகுப்புக்களின் ஏரோ கிளாஸ் இந்தப் பிரவுசரில் சப்போர்ட் செய்யப்படுகிறது.

# எம்.எஸ்.ஓபீசுக்கு இணையான அப்ளிகேஷன்கள்

(சென்றவாரத்தொடர்ச்சி)

**ஸோஹோ சூட் (Soho Suite)**

இதுவும் ஒரு ஒன்லைன் அப்ளிகேஷன் புரோகிராம். இதில் Zoho writer,Zoho Sheet and Zoho Show எனப் பலவகையான டொகுமெண்ட்களை உருவாக்கும் வசதிகள் தரப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பும் ஓப் லைனில் டொகுமெண்ட்களை எடிட் செய்து, பின் அப்டேட் செய்திடும் வசதியைக் கொண்டுள்ளது. இதனைப் பெற்றுப் பயன்படுத்த http://www.zoho.com/ என்ற முகவரியில் உள்ள இணையத் தளத்திற்குச் செல்லவும்.

**கே. ஒபிஸ் (K Office)**

நீங்கள் லினக்ஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் பயன்படுத்துபவராக இருந்தால், இந்த ஒபீஸ் சூட் உங்களுக்குப் பயன்படுத்த எளிதாக இருக்கும். இதில் அனைத்து அப்ளிகேஷன் வசதிகளும் உள்ளன. இதனை டவுண்ட்லோட் செய்திட நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி http:/www.koffice. org/

மேலே காட்டப்பட்டுள்ள ஒபீஸ் தொகுப்புக்கள் தவிர, சில குறிப்பிட்ட அப்ளிகேஷன்களுக்கு (வேர்ட், எக்ஸெல், பிரசன்டேஷன் போன்றவை) மட்டும் பதிலியாகப் பல சொப்ட்வெயர் தொகுப்பு உள்ளன. அவற்றை இங்கு காணலாம்.

**ஓப்பன் ஒபிஸ் கால்க் (Open Office Calc)**

மைக்ரோசொப்ட் எக்ஸெல் அப்ளிகேஷனுக்கு இணையானது இந்தப் புரோகிராம். இதில் கூடுதலாக டேட்டா பைலட் (Data Pilot)என்ற ஒரு வசதி தரப்பட்டுள்ளது. நிறுவனங்களின் டேட்டா பேஸ் தொகுப்பிலிருந்து டேட்டாவைப் பெற்று, பல வகைகளில அவற்றைக் கையாளும் திறன் பெற்றது. இதன்மூலம் பல தெளிவுள்ள முடிவுகளை எடுக்க இது உதவிடும். இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணையத்தள முகவரி: http:/www.openoffice.org/product/calc.html

**அபிகஸ் (Abykus)**

அபிகஸ் 2.0 என்ற இந்தப் புரோகிராம் ஒரு ஸ்ப்ரெட்ஷீட் புரோகிராம் ஆகும். இது வர்த்தகம் மற்றும் அறிவியல் சார்ந்த தகவல்களைக் கையாளப் பல வழிகளைத் தருகிறது. இதில் புள்ளிவிபரங்களைக் கையாண்டு தீர்வுகளைப் பெற ஸ்டேட்டிஸ்டிகல் விஸார்ட் தரப்படுகிறது. 190க்கும் மேலான கணக்கு போர்முலாக்கள், மேட்ரிக்ஸ் பயன்பாடுகள், நாள், நேரம் சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய சமன்பாடுகள், முப்பரிமாண கிராபிக்ஸ் வசதிகள் தரப்பட்டுள்ளன. எந்த ஓர் சுஷீட்டையும் இதில் திறந்து பயன்படுத்தலாம். இதனைப் பெற http://www. abykus.com/ என்னும் முகவரியில் உள்ள தளம் செல்லவும்.

**கிளீன் ஷீட்ஸ் (Clean Sheets)**

அனைத்து ஒப்பரேட்டிங் சிஸ்டங்களிலும் பயன்படுத்தக் கூடிய முதல் ஸ்ப்ரெட்ஷீட் புரோகிராம். இது ஜாவா கட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதால், இதனைப் பயன்படுத்த ஜாவா உங்கள் கணனியில் இருக்கவேண்டும். இதனைப் பெற http://csheets. sourceforge.net/என்ற முகவரி யில் உள்ள தளம் செல்லவும்.

**ஸ்ப்ரெட் 32 (Spread 32)**

இது ஒரு சிறிய ஸ்ப்ரெட்ஷீட் புரோகிராம். இதில் 256 நெட்டு வரிசையும், 65536 படுக்கை வரிசையும் கொண்ட மேட்டரிக்ஸ் தரப்படுகிறது. 255 ஓர்சுஷீட் கொண்டுள்ளது. 300க்கு மேற்பட்ட போர்முலா செயல்பாடுகளை இதில் மேற்கொள்ளலாம். இதனைப் பயன்படுத்த நீங்கள் செல்ல வேண்டிய இணையமுகவரி http://www. xtort.net/officeandproductivity/floppyoffice//

**எடிட் கிரிட் (Edit Grid)**

இது ஒரு ஒன்லைன் ஸ்ப்ரெட் ஷீட் புரோகிராம்.எக்ஸெல் புரோகிரம் தரும் அனைத்து வசதிகளும் இதில் கிடைக்கும். டேட்டாவினை இதனுடன் தொடர்புபடுத்தி, பின் எக்ஸெல் தரும் வசதிகளுக்கும் மேலான வசதிகளைப் பயன்படுத்தி, நாம் முடிவிற்கான ஸ்ப்ரெட்ஷீட்களை இதன் மூலம் தயாரிக்கலாம்.

இதனைப் பெற http://www.editgrid.com/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும். இணையத்தளங் கள் பலவற்றில் இதுபோல ஸப்ரெட்ஷீட் புரோ கிராம்கள் வெவ்வேறு வசதிகளுடன் உள்ளன. அவற்றில் Google Spread sheets,Zoho Sheets, Num Sum,Simple Spreadsheet, wikiCalc, ZCubes Calci ஆகியவவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

# எமது அரசியலை நாமே நடத்தும் காலத்தை உருவாக்குவோம்!

## கூட்டமைப்பின் வேட்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் சூளுரை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பு வேட்பாளராக நிற்கின்ற பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தமது கட்சி அலுவலகத்தில் 14.03.2010 அன்று பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்த போது பின்வரும் விடயங்களை முன்னிலைப்படுத்தினார்.

◆ இன்றைய அரசியலில் திட்டமிட்டே பெரும் தொகையான கட்சிகளையும் சுயேட்சைக்குழுக்களையும் சிங்கள அரசு களமிறக்கியுள்ளது. கல்வியறிவில் உயர் நிலையில் உள்ள யாழ்.சமூகத்தை கேலிக்குள்ளாக்கும் நடவடிக்கையாகவே இது பார்க்கப்படவேண்டும். கொழும்பில் இடம்பெயர்ந்து வாழ்ந்தோர் பலர் "சென்று வா வென்று வா" என ஆசீர்வதித்து அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் இங்கு எமது மக்களின் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடுகளில் நின்று ஒரு குழப்பமான தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சமீப காலத்தில் சுற்றுலா எனக் கூறி வருபவர்கள் யாழ்ப்பாணத்தில் அல்லோலகல்லோலப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

மூன்று பெரிய தனியார் விடுதிகளான சுபாஸ் விடுதி, ஞானம்ஸ் விடுதி, அசோக் விடுதிகளை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடக்கி இராணுவம், பொலிஸ் என்பவற்றை நிலைகொள்ள வைத்துவிட்டு சுற்றுலாத் துறையை வளர்க்கிறோம் என்று கூறுவது புத்திசாலியான உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். கலக்கிய குட்டையில் மீன்பிடிக்கும் முயற்சி போன்று யாழ்ப்பாணத்தை திரும்பிப் பார்க்காத பலரும் தேர்தல் களத்தில் இறங்கியிருப்பது உங்களுக்கு அவமானமாகத் தோன்றவில்லையா?

இந்த நிகழ்வொன்றே இங்கிருப்போரை முட்டாளாக்கும் நடவடிக்கையென புரிந்து கொள்ளப் போதுமானது. இதற்கு நீங்கள் தகுந்த பாடத்தினைப் புகட்டவேண்டும்.

◆ இன்று நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை, போர் என்ற கொடிய செயலால் சிங்கள அரசாங்கமும் சர்வதேசமும் கூட்டு சதியிட்டு மக்களை இடம்பெயரவைத்த நடவடிக்கையாகும். உள்ளூர் இடம்பெயர்வு என்ற வார்த்தையை சிங்கள அரசே ஏற்படுத்தியது. அதேபோல் சர்வதேச புலம்பெயர்வாளர் எனும் வர்க்கத்தினரையும் இவர்களே ஏற்படுத்தினர். இவை பாரம்பரியமான எமது தமிழ்ப் பிரதேசங்களிலேயே நிகழ்கின்றன. ஏனைய இடங்களில் நிகழ்வதில்லை. தமிழ், முஸ்லிம் மக்களே இதில் பாதிக்கப்படுகின்றனர்.


ஒருத்தரின் வாழ்வாதாரங்களை சிதைப்பதன்மூலம் அவரின் ஒட்டுமொத்த வாழ்வினையும் சிதைக்க முடியும். இதனைத்தான் பல இனவாத சிந்தனை கொண்ட திட்டமிடலாளர்களைக் கொண்டு அரசு வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றது. வன்னியில் மூன்றரை இலட்சம் மக்கள் பலாத்காரமாக பிடுங்கியெறியப்பட்டுள்ளனர்.

அவர்களை மீட்டெடுப்பது என்பது சாதாரண விடயமல்ல. 2000 வருடங்களுக்கு மேலான வாழ்க்கை தொடர்ச்சியைக் கொண்ட வன்னி நிலப்பரப்பை ஒரு சிலமாதங்களில் மீட்டெடுப்போம் என்று சொல்லும் அரசின் கபடத்தனத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

இவற்றினை மாற்றி எமது பொருளாதாரத்தை நாமே அபிவிருத்தி செய்யவும் எமது அரசியலை நாமே செய்யவும் எமது கலாசாரப் பண்பாடுகளை நாமே பேணும் வழிகளில் காண்பதற்காகவுமே நீண்டகாலமாக விலைபோகாமல் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தமிழரசுக் கட்சியில் போட்டியிடுகின்றேன். அரசியல் என்பது



சாக்கடையல்ல. அது புனிதமாக்கப்பட வேண்டும். அதற்கு ஆய்வு, அறிவு, தெளிவு, அஞ்சாமை எதனையும் ஆதாரத்துடன் எடுத்துரைக்கும் வல்லமை என்பன வேண்டும் என மாணவர்களிடையே உரையாற்றும் போது பேராசிரியர் குறிப்பிட்டார். (நு)




## பொதுத் தேர்தல்-2010

# தமிழ் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் அதற்கான ஆணையை அவர்கள் எமக்குத் தருவர்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் உரை

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (செவ்வாய்க் கிழமை) தீவுப் பகுதிகளில் தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உரையாடியதுடன் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

இந்த பிரசார நடவடிக்கையில் ஐ.தே.க.வின் வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜனும் கலந்துகொண்டார்.

வேலணையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.தே.க.வின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்,

யாழ்.குடாநாட்டு மக்கள் மாற்றம் ஏற்படவேண்டும் என்றே விரும்புகின்றனர். இதற்கான ஆணையினை வழங்க இந்த மக்கள் தயாராகிவிட்டனர். தீவுப் பகுதியில் வாழும் நீங்களும் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றீர்கள். இவற்றுக்கெல்லாம் விரைவில் தீர்வு காணப்படும்.

குடாநாட்டில் எமது அணியினர் ஆறு உறுப்பினர்களை பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் ஆதரவு எமக்கு பெருகிவருகின்றது. எனது கணவன் தீவுப் பகுதிக்கும் பல்வேறு சேவைகளை செய்துள்ளார். எனவே அவர் விட்டுச் சென்ற



பணியினை தொடரவேண்டிய தேவை ஏற்பட்டமையினாலேயே நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

இங்கு உரையாற்றிய வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் எமது அணியினரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

மக்களின் பலமான ஆதரவு எமக்குள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டுள்ளமையினால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். எனவே எமது அணியினரின் வெற்றி உறுதி என்றார். (நு)


# தீர்வுத்திட்டம் பற்றி பேசுவோர் இதுவரை என்ன செய்தார்கள்?

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட அமைப்பாளர் கேள்வி

வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோரைத் தெரிவு செய்யும்படி எமது மக்களுக்கு ஒருசிலர் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வாறு கோரிக்கை விடுப்பவர்கள் இதுவரையில் எமது மக்களுக்கான வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்றியுள்ளார்களா?... என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலென்ரின் உதயன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் குருநகர்ப் பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர், எமது வரலாற்றில் எமது மக்கள் பல்வேறு துன்ப, துயரங்களுக்கும், அழிவுகளுக்கும் முகங்கொடுத்து நின்றிருந்தபோது அவர்களை எட்டியும் பார்த்திராத போலி அரசியல்வாதிகள் வரலாற்றுக் கடமை எனக் கூறி எதிர்வரும் தேர்தலிலும் எமது மக்களின் வாக்குகளை அபகரிக்கப் பார்க்கிறார்கள்.

இந்த சுயநலவாதிகள் இதுவரை காலமும் எமது மக்களுக்கு இவ்வாறான வார்த்தைகளைக் கூறிக் கூறியே எமது மக்களின் பல்வேறு அழிவுகளுக்கும் காரணமானது போதாதென்று மென்மேலும் எமது மக்களை படுகுழியில் தள்ளிவிட்டு அதன்மூலம் சுயஇலாப அரசியல் நடத்தி, வெளிநாடுகளில் இருக்கும் தங்களது குடும்பங்களுக்கும் உறவுகளுக்கும் மென்



மேலும் சொத்துச் சேர்க்கப் பார்க்கிறார்கள்.

கடந்த பாராளுமன்றத்தில் 22பேர் இருந்த நிலையில் எந்தவொரு அரசியல் தீர்வுத் திட்டத்தையும் முன்வைத்திராத இவர்கள், எதிர்வரும் தேர்தலுக்குப் பின்னர் தீர்வுத் திட்டம் குறித்து பேசுவது நகைப்புக்குரிய விடயமாகும் என்பதை உணர்த்திய ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் உதயன், இவ்வாறானவர்கள் அரசியலில் இருக்கும் வரை எமது மக்களுக்கு எந்த வித விமோசனமும் கிடையாது என்றும் தெரிவித்தார். (நு)

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் சிந்திக்கத் தூண்டியுள்ளது

அன்புள்ள ஆசிரியருக்கு,

கடந்த திங்கட்கிழமை (15.03.2010) "யாழ்ப்பாண மக்களை அறிய ஏழு பிறப்பு எடுக்க வேண்டும் என" மகுடமிட்டு ஒரு சிறந்த தலையங்கம் எழுதியிருந்தீர்கள். தேர்தல் களத்தில் குதித்திருக்கும் திடீர் தலைவர்களைப் பற்றி நீங்கள் எழுதியவை சுவாரஸ்யமாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருந்தன.

**"கிரீடம் நிலத்தில் விழுந்து**
**கிடந்தால் அதனை எடுத்து**
**அணிந்து கொள்ள யார்தான் விரும்பமாட்டார்கள்"**

இது சுந்தரனாரின் மனோன்மணியத்திற் காணப்படும் வசனமாகும்.

தேடி சமயம் மாறிய ஒருவரை கட்டுப்பணம் இழக்கச் செய்தவர்கள் உண்மையான கிறிஸ்தவ அடியானாகிய எஸ்.ஜே.வியைத் தமது முடிசூடா மன்னனாக்கி வைத்தவர்கள்.

யாழ்ப்பாண மக்களுக்கென்று ஓர் அடையாளம் இருக்கிறது. அது தான் பனை மரம் நேராக, வளைந்து கொடுக்காமல் , வருடம் முழுவதும் வறட்சியைக் காட்டாது, வைரமாக நிற்பது பனை.அதற்கு தண்ணீர் ஊற்றுவார் யாருமில்லை. ஐம்பது அங்குல மழை வீழ்ச்சிக்குக் குறைந்த பிரதேசத்தில் தனது செளகரியங்களை பற்றி கவலைப் படாது பயன்கொடுத்துக்கொண்டே இருக்கி றது.

இதற்குக் காரணம் அதன் நீண்ட ,பரந்த பக்கவேர்கள் தாம். ஏனைய விருட்சங்களுக்களுமேயாகும். இந்த சுனைகளில் இருந்து தான் தமிழ் மக்கள் தமது ஊட்டச்சத்தைப் பெறவேண்டும்.

கடந்த 30 ஆண்டுப் போரில் 10 மில்லியன் பனை மரங்களில் மூன்றில் ஒரு பகுதி அழிக்கப்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் .

கவிஞர் த.ஜெயசீலன் அழகாகப் பாடினார்.

**"கருக்குக் கணைகொண்ட கரும்பனைகள்**
**உருக்குலைய எங்கள்**
**ஊரழகு பாழாச்சு**
**என்று புதுவடலி எழும்,எமதூர்க்குத்**
**தென்றலினை மீண்டும் வரவழைப்பதற்கு**
**என்று புது வடலி எழும்"**



## தமிழ் மக்களின் எதிர்கால நலன்பற்றி கவலை கொள்ளாமல் இருக்கமுடியாது

"யாழ்ப்பாண மக்களைப் பற்றி அறிந்து கொள்வதெனில் அதற்கு ஓர் ஆயுட்காலம் போதாது' என்று குறிப்பிட்டிருந்தீர்கள். யாழ்ப்பாண மக்கள்,"வேடிக்கை மனிதர்கள் "இல்லை என்பது மட்டும் நிச்சயம்."மனத்துக்கண் மாசிலனாதல் அறம்,ஆகுல நீரபிற " என்பது அவர்கள் தாரக மந்திரம். அரசியல் இலாபம் குத் தெரியாத நீர் நிலைகளைக் கண்டு பிடித்துத் தனது ஊட்டத்தைப் பெற்றுக்கொள்வது பனை.

யாழ். மக்கள் இத்தனை இழப்புக்களுக்கும் மத்தியில் வைரமாக உறுதியுடன் நிற்பதற்குக் காரணம் அவர்களுடைய அறநூல்களும் பக்திப் பனுவல்களும் சமய நம்பிக்கை பனை மரங்களின் அழிவைக் கண்டு கண்ணீர் வடித்த மில்க்வைற் கனகராசாவும் மறைந்து விட்டார். அப்படிப்பட்ட உணர்வுள்ளவர்கள் சமுதாயத்தின் தலைமையை ஏற்க வேண்டும்.

இன்று அரசியலில் ஆரவாரமும் முண்டியடிப்பும் மேலோங்கி நிற்கின்றன. தமிழ் மக்களின் வருங்காலம் குறித்து கவலைப்படாமல் இருக்க முடியாது. தமிழ் மக்கள் தொடர்ந்து தமது பண்பிலும் கடின உழைப்பிலும் நீதி

**முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசனின் விமர்சனப்பார்வை**

நியாயத்திலும் உறுதியாக நிற்பார்களானால் இந்தப் பனை மரங்களுக்குத் தென்னிலங்கை மட்டுமன்றி ,இந்தியாவும் உலகமும் செவி மடுக்கும் காலம் விரைவில் வரும்.

## தோட்ட மக்களுக்காக அரசாங்கம் ரூ.82 கோடி செலவில் வீடுகள் அமைப்பு

தோட்ட மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்தின் கீழான தோட்ட வீடமைப்பு திட்டத்தின் கீழ் 12 ஆயிரத்து 213 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இவற்றுக்கென அரசாங்கம் 828 மில்லியன் ரூபாவை செலவு செய்திருக்கிறது என தேசநிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவிக்கிறது.

நுவரெலியா மாவட்டம் உட்பட கண்டி,பதுளை, மொனறாகலை, இரத்தினபுரி,கேகாலை, குருணாகல், காலி, மாத்தளை, மாத்தறை, களுத்துறை மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் பெருந்தோட்டத்துறை மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் தோட்ட வீடமைப்பு திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகிறது.

தோட்ட வீடமைப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளை கண்டறியவும் சிறந்த முறையில் வீடுகளை அமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரதானமாக அந்நிய செலாவணியை ஈட்டி பெருந்தோட்டத்தறை மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஊக்குவிப்பதற்காக 1997 ஆம் ஆண்டு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஏற்படுத்தப்பட்டது.

10 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் என்னவென்பது பற்றி ஒழுங்காக இனங்காணப் படவில்லை. இந் நிலையில் தான் 2006 ஆம் ஆண்டு தேச நிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டது. பெருந்தோட்டத்துறை மக்களை இலக்காகக் கொண்டு அரசாங்கம் முன்னெடுத்துவரும் திட்டங்களில் பிரதானமாக தோட்ட வீடமைப்பு திட்டமும் ஒன்றாகும்.

தோட்ட வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீடொன்றைப் பெற தகுதிபெற்ற ஒருவருக்கு ஏழு பர்ச்சஸ் காணியை அரசு வழங்குவதுடன் பொருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் பங்களிப்புடன் மிகவும் குறைந்த செலவில் இவ் வீடுகள் அமைக்கப்படுகின்றன.

(ஓ-6)

## பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்குச்சீட்டுக்கள் அனுப்பி வைக்கும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளவர்களுக்கான வாக்குச்சீட்டுகளை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தபால் மூல வாக்காளர்களுக்கான வாக்குச்சீட்டுகள் நேற்று அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் செயலகம் தெரிவித்தது.

இது தொடர்பாக தேர்தல் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தபால் வாக்குகளை செலுத்தும் விசேட நாட்களாக எதிர்வரும் 25 மற்றும் 26 ஆகிய தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அந்த நாட்களில் சம்பந்தப்பட்ட வாக்காளரை அழைத்து இரகசியமாக வாக்குகளை செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தவும் வாக்களித்த பின்னர் உடனடியாக அந்த வாக்குச்சீட்டு அடங்கிய பொதியை பாதுகாப்பாக தபால் மூலம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கும் அனுப்புவது உறுதிப்படுத்தப்படுதல் அதிகாரியின் விசேட பொறுப்பு என்றும் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

## பூநகரி,சங்குப்பிட்டி பாதையை மீளச் செயற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அடம்பன் ஊடான பூநகரி சங்குப்பிட்டிப் பாதையை மீளச் செயற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

அமைச்சரின் தொடர் முயற்சிகளின் காரணமாக ஏ-9 தரை வழியானது கட்டம் கட்டமாக பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டு பின்னர் அமைச்சர் ஜனாதிபதியிடம் முன் வைத்த 10 அம்சக் கோரிக்கைக் கிணங்க 24 மணி நேர சுதந்தி ரப் போக்குவரத் திற்காக அப் பாதைதிறந்து விடப் பட்டது.

இந்த வகையில் மேற்படி அடம்பன் ஊடான பூநகரி, சங்குப்பிட்டி பாதையும் வெகு விரைவில் பொது மக்களின் சுதந்திரமான போக் குவரத்து செயற்பாடுகளுக் காகத் திறந்து விடப் படவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (ஓ-6)

## செயற்கை கால்களை பொருத்த இந்தியக் குழு நாளை வவுனியா விஜயம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டின் பேரில் கடந்தகால யுத்தம் காரணமாக கால்களை இழந்தவர்களுக்கு செயற்கைக் கால்களைப் பொருத்தும் செயற்பாடுகளுக்கென இந்தியக் குழுவொன்று நாளை வெள்ளிக்கிழமை வவுனியா செட்டிக்குளம் ஆனந்த குமாரசுவாமி நலன்புரி நிலையத்திற்கு வருகை தரவுள்ளது.

மேற்படி குழுவினர் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியிலிருந்து 3.30 மணி வரை அங்கு தங்கியிருந்து செயற்கைக் கால் பொருத்துவது தொடர்பிலான பயிற்சிகளை வழங்குவதுடன் இத்திட்டத்தின் கீழ் ஆயிரம் பேர் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-6)


**சிவாச்சார்ய வாழ்வில் இருபத்தைந்து வருடங்கள்**



யாழ்/ வண்கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய ஆதீனகர்த்தாக்களில் ஒருவரும் பிரதம குருவுமான சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் சிவாச்சார்யாபிஷேகம் பெற்று இன்றுடன் இருபத்தைந்து வரு டங்கள் ஆனதையிட்டுஅவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து குருத்துவப் பணி ஆற்றுமாறு வீரகத்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,
அன்புடன்
து.மகாதேவன் (சகோதரன்)
மாலினி முரளிதரன் குடும்பம்
ம.ரவிஷங்கர்
(பெறாமக்கள்)
நாயன்மார்கட்டு.

(898)

# சுற்றுலா விசாவுடன் வருகை தந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் கைது

(கொழும்பு)

சுற்றுலா விசாவுடன் இலங்கைக்கு வருகைதந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட நான்கு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு இந்தியர்களும் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் விசாரணை பிரிவு உதவிக் கட்டுப்பாட்டாளர் வில்லியம் தேவேந்திரராஜா கூறினார்.

திணைக்களத்தின் கீழ் இயங்கும் மிரிஹான தடுப்பு முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி நாட்டுக்குள் வருகைதருவோர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தை மீறும் செயலென தெரிவித்த அவர் கைது செய்யப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (ஓ-6)

# தேர்தல் வன்முறைகளை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிப்பு

தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் காத்திர மான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள் ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான பொலிஸாரின் விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை என கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவான சட்ட திட்டங்களை பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் முதன்மைக் கடமை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஒரே கட்சிக்குள்ளான மோதல் சம்பவங்களின் எண்ணிக்கையும் இம்முறை அதிகமாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களினால் இதுவரையில் 9 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

# பாராளுமன்ற ஆட்சிக் காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்படும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற ஆட்சிக் காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் அறிவித்துள்ளது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக தற்போதைய ஆட்சி முறைமையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என சுட்டிக்காட்டியுள்ளது.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய ஓர் பொருளாதார முறைமையின் மூலம் மக்களுக்கு பல்வேறு சலுகைகளும் நிவாரணங்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு, எரிபொருள் விலைகள், மின்சார மற்றும் நீர்க்கட்டணங்கள் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கட்டம் கட்டமாக நாட்டு மக்களின் சம்பளங்கள் பத்தாயிரம் ரூபா வரையில் அதிகரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தகுதியற்றவர்கள் பாராளுமன்றத்திற்கு பிரவேசிப்பதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மாகாண மற்றும் பிரதேச சபை தேர்தல்களை ஒரே தடவையில் நடாத்தி வீண் விரயத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனவும் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# மனித உரிமைகளில் நம்பிக்கை கொண்ட நாடு என உலகிற்கு உணர்த்த வேண்டிய தருணமிது

## முன்னாள் பிரதம நீதியரசர்

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்து விட்ட நிலையில் யாருக்கு எதிராகவும் யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதேநேரம் யார் மீதும் நம்பிக்கையீனம் கொள்ளவும் தேவையில்லை. இலங்கை ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளில் நம்பிக்கை கொண்ட நாடு என உலகிற்கு எடுத்துணர்த்த வேண்டிய தருணம் இதுவாகும்.

இந்த நாட்டில் ஜனநாயகக் கட்டமைப்பு என்று எதுவும் கிடையாது. ஏனெனில் இங்கே மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கும் இடமில்லை. அவை மிகவும் பெறுமதியானவை. ஆனால் அதற்கு இங்கு இடமில்லை என்றே கூறவேண்டும். இந்நாடு யுத்த நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் இங்கு இளைஞர்களில் பலர் அவரகாலச் சட்ட நிலைமைக்குள்ளேயே பிறந்துள்ளனர். இதனைக்கூற வேண்டியதையிட்டு நான் கவலையடைகின்றேன். 1970களில் இருந்து அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. அதாவது கடந்த நாற்பது வருடங்களாக அவசரகாலச் சட்டத்துக்கு நாம் முகங்கொடுத்து வந்துள்ளோம். இத னால் இங்குள்ளவர்களில் பலருக்கு சாதா ரண சட்டங்கள் என்னவென்பதே தெரியா துள்ளது.பிறிதொரு நாட்டில் இருந்து வந் துள்ளவர் என்ற படியால் இவையெல்லாம் சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு வியப்பாகத் தோன்றலாம் நாம் இந்த நிலையில் இருந்து வெளிவர வேண்டும்.

தற்போது யுத்தம் நிறைவடைந்து விட்டது. நான் யாருக்கு எதிராகவும் யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் சந்தேகித்து நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. தற்போது திறந்த மனதுடன் செயற்படுவதற்கான தருணம் என்றே நான் கருதுகின்றேன். நாம் ஜனநாயகவாதிகள், தாராளமயமானவர்கள், நாம் மனித உரிமைகளை மதித்து நடப்பவர்கள் என உலகிற்கு காண் பிப்பதற்கான தருணம் இதுவாகும் என்றார். (ஓ-6)


AWARENESS PROGRAMME

place: Jaffna Central College Romaine Cooke Hall

Date &Time: 19.03.2010 at 9.30 A.M



Want to be a world recognised Engineer?

நீங்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு பொறியியலாளராக ஆவலாக உள்ளீர்களா?

Let Sri Lanka Telecom help you to make your dream a reality.....

உங்கள் கனவை நனவாக்க ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உதவ முன்வந்துள்ளது.

The nation's undisputed most trusted name in the communications arena, *Sri Lanka Telecom now offers you an opportunity* to obtain a prestigious and internationally recognised Bachelors Degree(Engineering) in Telecom munication /Mobile Communications/ Electronics at a cost effective price.

**We Guarantee...**

- The most professionally qualified and internationally trained *lecturers with hands-on experience and unmatched field expertise*
- The ideal student friendly learning environment supplemented with the latest educational resources *in state-of-the-art class rooms specially designed to train Telecom staff*
- *The best in-plant training facilities in Sri Lanka* that offers the most sophisticated and ultra modern high tech telecommunication equipment
- An internationally recognised degree on par with other highly acclaimed universities worldwide at an attractive *low investment ( Investment for Tution fee including 3rd year studies in UK is less than Rs. 2 Million)*

***Entrance Requirement:***

Two Passes at the Advance Level Examination in the math's stream

**After the seminar Interview will be conducted to select the suitable candidates.**

For more details contact

**Nuwan on 0715364873 / 0112956258 / training_gl@slt.com.lk.**

(C-4680)

edexcel INTERNATIONAL BTEC HND

www.training.slt.com.lk

Sri Lanka Telecom



Want to be a world recognised Engineer?

AWARENESS PROGRAMME

இடம் :"Romaine Cookமண்டபம் ,யாழ் மத்திய கல்லூரி

திகதி & நேரம் :19.03.2010 , 9 .30A.M

*நீங்கள் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படுகின்ற பொறியிலாளர் ஆக வேண்டுமா?*

*உங்கள் கனவு நனவாக சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் உதவுகின்றது ......*

நீங்கள் கௌரவமான சர்வதேச தரம்மிக்க பொறியியலாளராவதற்காக தொலைத்தொடர்பு மற்றும் இலத்திரனியல் துறைகளில் பட்டப்படிப்பினை நியாயமான கட்டணத்தில் மேற்கொள்வதற்கு சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் உங்களிற்கு ஒரு சந்தர்ப்பத்தை இப்பொழுது வழங்குகின்றது.

*நாங்கள் உத்தரவாதமளிப்பது ......*

- சர்வதேச தரத்தில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்சார் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள்
- மாணவர்களிற்கு நட்புடன் கூடிய முன்மாதிரியான பயிற்சி சூழலில் நவீன பயிற்சி வழங்களுடன் கூடிய பயிற்சி.
- மிகச்சிறந்த உள்ளக பயிற்சி வசதிகள்.
- உலகளாவிய பல்கலைகழங்களின் பட்டத்திற்கு சமனான சர்வதேச தரம் வாய்ந்த பட்டம் மிகக் குறைந்த முதலீட்டில்.

*பிரவேச அனுமதிக்கு :*

க.பொ.த உயர்தரத்தில் 02 பாடங்களில் சித்தி - கணிதத் துறையில்

கலந்துரையாடலின் பின் மாணவர்களை தெரிவு செய்ய நேர்முக பரீட்சை நடத்தப்படும்.

மேலதிக விபரங்களிற்கு தொடர்புகொள்ள :

திரு. நுவான் - 0715364873 / 0112956258 / **training_gl@slt.com.lk**

(சி-4680)

edexcel INTERNATIONAL BTEC HND

www.training.slt.com.lk

Sri Lanka Telecom

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அ

# நூதனபஞ்சதள இராஜகே

# மஹாகும்பாபிஷே

விரோதி வருஷம் பங்குனித்திங்கள் 4ஆம் நாள் (18.03.2010) எ

## ஆலய வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலும் ஒன்றாகும்.ஆரம்பத்தில் பேச்சியம்மன் எனும் திருநாமத்துடன் அன்னை சிவகாமி 1850 ஆம் ஆண்டுகளுக்கு முன் சூளைகள் சூழ மாமர நிழலில் முன்னைய பெரியார்களால் பராமரிக்கப்பட்டு வந்தாலும் வேலன் என்னும் பெரியவராலேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம்பெற்றது எனலாம்.

1855 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசார சீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினார். இது ஆலய வழிபாட்டின் மறுமலர்ச்சிக்காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம்பிகையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ் ஆலயம் நான்கு பக்கமும் சுண்ணாம்புக்கற்களால் கட்டப்பட்டு கூரை ஓட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட ஆலயமாக உருப் பெற்றது. பஞ்ச மணியும், சேமக்கலமும், சந்தனக்கிண்ணம் மற்றும் பூசை மணியும் இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ ஆசாரத்தைப் பேணும் சைவப் பெரியார் சபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப்பட்டார். இக்காலத்திலேயேதான் வைகாசி விசாக பட்சத்தில் ஆடு, கோழி, போன்ற உயிர்ப்பலி இடுதலும், மடைபோடுதலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958வரை இவரது தொண்டு சென்றது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் முத்தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம் இவ்வூரைச் சேர்ந்த வீரகத்தி தம்பிஐயா ஆகியோரின் பெரு மனதினால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச்சபையினால் இவ் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டுகாலப் பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.


நித்திய பூசகராக அன்று முதல் வீ.தம்பிஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற்சியால் ஆலயத்தில் நடைபெற்றுவந்த வைகாசி விசாகப் பொங்கலில் இடம்பெற்ற பலியிடுதல், மடை போடுதல் போன்ற முறைமைகள் மாற்றப்பட்டு ஆலயத்தின் புறச்சூழலில் அமைந்திருந்த சூளைமேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தை சிறப்பான திருப்பெரும் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். 1965 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட முன்னாள் நீதிபதி சோ.தனபால சிங்கம் அவர்களும் யாழ்பொலிஸ் சுப்பிறிண்டர் வான்சண்டன் அவர்களும் வடமாகாண அரசாங்க அதிபர் ஐவான் சமரசிங்க அவர்களும் அத்திவாரக்கல் நாட்டுவிழாவை முன்னின்று செய்தனர்.

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சுப முகூர்த்த நன்நாளில் பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் பிரதிஸ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து **சிவகாமி அம்பாள்** என்னும் திருநாமம் சூட்டப்பட்டது.1966 ஆம் ஆண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது.

09.07.1971 ஆம் ஆண்டு தேர்த்திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிப்பீடம், கொடித் தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டு தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்றது.

1977 ஆம் ஆண்டு அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத்தில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்பும் உடையது. திருக்கோயில் வாயிலில் தல விருட்ஷமாகக் காணப்படும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தினூடாக அம்பாளின்



விமானத்தில் கலசத்தினைக் காணக் கூடியதாகவுள்ளது. இது அற்பு

மீண்டும் 1982 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து தலைவராக இருந்த அரச அதிபர் யோகேந்திரா துரைச்சாமி அவர்க நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1990 இல் திருக்கோவில் வருடாந்த சங்காபிஷேகதினத்தன்று க வரவழைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்ப சூட்டும் விழாவும் கொண்டாடப்பட்டது.

கவிமாமணி .வீரமணி ஐயர் அவர்களால் ஆக்கப்பெற்று தென் ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதி இடம்பெற்ற வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோம ஆசியுடன் வெளியிடப்பட்டது. அத்தோடு 1997 ஆம் ஆண்டு இரன்

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கையின் வட பால் அமைந்துள்ள யாழப்பாண நகரில் உள்ள கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது இக்கிராம மக்களிடையே ஆன்மீக எழுச்சியை வளர்க்கும் ஒரு செயலாகும்.

ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்வது 12 வருடங்களுக்கு ஒரு முறை செய்யப்படும் அரிய ஒரு நிகழ்வாகும். இவ் ஆலய பரிபாலன சபையினரும் இவ் ஊர் மக்களும் இணைந்து ஆலயத்தைப் புனரமைப்பு செய்து இன்றைய நன்னாளில் இப்பெருவிழாவை நடாத்துகின்றனர். இவ்விதம் ஆலய கைங்காரியங்களை செய்வதால் மக்கள் நற்கீர்த்தியுடன் வாழ்வர். இவற்றை முன்னிட்டு நடத்தும் இவ் ஆலய பரிபலான சபையினர் ,இக்கிராம மக்கள் கிரியைகளை செய்வனே நிறைவேற்றும் அந்தணச்சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் அம்பாள் அருள் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்தர் பாரமார்ச்சார்ய சுவாமிகள்
ஆதீன முதல்வர், நல்லை திருஞான சம்பந்தர்.ஆதீனம்.

### ஆசியுரை



கோபுர தரிசனம் கோடி புண்ணியம் ஆலயங்களில் முதல் வணக்கத்திற்குரியது இராஜகோபுரம் ஆகும். கோண்டாவில் தில்லையம்பதி அடியார்களின் நீண்ட கால கனவு இன்று நனவாகிறது. எமது ஊர் அடியார்களினதும் வெளிநாடுகளில் வாழும் அன்னையின் அடியார்களினதும் பெரும் முயற்சியினால் இன்று இக்கோபுரம் வானுயர்ந்துநிற்கிறது. இதனை பார்க்கும் போது நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

அம்பாளின் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று அடியார்கள் அனைவரும் அம்பாளின் அருளைப்பெற வேண்டும் என வேண்டி நிற்கிறோம்.

சீ.ஆனந்தராசா
தலைவர்
ஆலய பரிபாலன சபை.

**தென்னிந்தியப் பின்னணிப் பாடகர்களான வீரமணி ராஜ், தீபச்சக்கரவர்த்தி, கிருஸ்ணராஜ், முகேஸ் ஆகியோர் பாடிய கோபுர தரிசனம் சிவகாமி அம்பாள் கும்பாபிஷேக கீர்த்தனை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலயமுன்றலில் நடைபெறும்.**




புலவர் வீ

30 வருடகால அனுபவத்தில் டியிற்றல் வ

புதுப்பொலிவுடன் பிறந்தநாள் வாழ்த்துக்கள் பூப்புனித


சமய நிகழ்வுகள் குறு

இவற்றின் இனிய நிகழ்வுகளுடன் உ

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில

# காண்டாவில் தில்லையம்பதி
# ி அம்பாள் திருக்கோயில்
# ஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ
# ஷேக விஞ்ஞாபனம்

## 2010) வியாழக்கிழமை காலை 10.18 மணி முதல் 11.30 மணி வரை



து. இது அற்புதமான ஒன்றாகும்.
உலக இந்து மகாசபை இலங்கை இணைப் பிரதித்
ச்சாமி அவர்களால் தைப்பூசத்தினத்திற்கு அடிக்கல்

தினத்தன்று காசியிலிருந்து காசி விஸ்வநாதர் இங்கு
ங்குனி உத்தர சங்காபிஷேகத்தின்போது அம்பாளின்
ளாலும் அம்பாளுக்குப் பொன்முடியும் திருகோரணம்

ப்பெற்று தென்னிந்திய பக்திப்பாடகர் கலைமாமணி
ந்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா 1994 இல்
லஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்
ஆண்டு இரண்டாவது பக்திப்பாமாலை ஒலிப்பதிவு

நாடாவும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீசக்கரம் 1998 இல் இடம்பெற்ற பங்குனி உத்தர தினத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25 ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக் குடை சூட்டும் விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு (மஹோற்சவ காலப்பகுதியில்) பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம்பதியாள் கீர்த்தனைகள் தென்னிந்திய கலைஞர்களான கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ்.செல்வக் குமார் ஆகியோரால் பாடப்பட்டது.

2003 ஆம் ஆண்டு மஹோற்சவப் பெரு நாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுநவக்கிரகமும் புதிதாக அமைக்கப் பட்டு அம்பாளுக்கு செங்களனித் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்த மண்டபத் தெற்குவாசல் திறக்கப்பட்டது.

இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப்பெருமான், மாணிக்க வாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் தமிழகத்தின் கும்பகோண நவகன்னிகை எனப் போற்றப் படும் மஹாமாசிமா தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சுபானு வருடம் பங்குனி உத்தர தினத்தன்று சிவஸ்ரீ சதா .மகாலிங்க குருக்கள் தலைமையில்மஹாகும்பாபிஷேகம்நடைபெற்றது.

அத்தோடு அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான ரி.எம்.எஸ் செல்வகுமார், கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் ஆகியோரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்த்தனைகள் பாகம் – 4 வெளியீடு செய்யப்பட்டது.

ஆலயத்திற்கு ஒரு இராஜகோபுரம் அமைக்க வேண்டும் என்ற அடியார்களின் அவாவினை பூர்த்தி செய்யும் வகையில் அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோண வடிவில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் தென்னிந்திய சிற்ப வல்லுனர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் ஈழத்துச் சிற்பவல்லுனர்களால் திருப்பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் அன்னையின் அடியவர்களினாலும் எங்கள் கிராமத்து அடியவர்களின் நிதியினாலும் அவர்களின் உழைப்பினாலும் நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரம் வானுயர்ந்து காட்சி தந்து எமக்கு அருளாட்சி வழங்குகின்றது.

இவ் இராஜகோபுரத்திற்குரிய துவார பாலகிகள் இரண்டும் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.அத்தோடு இராஜகோபுரத்திற்குரிய கண்டாமணியும் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளது அம்பாளின் அருளினால் இராஜகோபுரத் திருப்பணிகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் இன்று மகாகும்பாபிஷேகம் காண்கிறது.

### இராஜகோபுர கும்பாபிஷேக பெருவிழா



உலகத்தில் உள்ள பொருட்களில் ஓர் வித பூத சக்தி உண்டு. அதை மேல் நாட்டவர் மின்சாரம் என்பர். எந்தச் சக்தி எல்லா பொது இடத்திலும் ஒரே தன்மையாக அமைவதில்லை. குறைந்தும் கூடியும் அமைவதுண்டு.

பஞ்ச பூதங்களாலும் ஆக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம் கோண்டாவில் தில்லையம்பதியிலே இன்றைய தினம் நடைபெறுகின்றது. இந்த இராஜகோபுரத்திற்கு சரீரஉதவி, பொருள் உதவி, நல்வாக்கு உதவி செய்த உள்நாட்டு அன்பர்கள், வெளிநாட்டு அன்பர்கள், கோயில் நிர்வாகத்தினர், கோபுரத்திருப்பணி சபையினர், இளைஞர், தொண்டர்கள், அனைவருக்கும் இந்தத் தினத்திலே அன்னை சிவாகமசுந்தரியினுடைய திருவருளும் எம்முடைய நல்லாசியும் கிடைக்கப்பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என வாழ்த்தி நல்லாசி கூறி அமைகின்றோம்.

**கோபுரதரிசனம் கோடி புண்ணியம்**
**லோகா சுகினோ பவந்து**

சிவஸ்ரீ இரத்தின சுந்தரேஸ்வரக் குருக்கள்,
தேவஸ்தான குரு,
அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில்
ஆதீன கர்த்தா.

### ஆசியுரை



கோபுரங்கள் சமயத்தை சார்ந்திருந்தாலும் தமிழ் மக்களின் பண்பாட்டு பெருமைக்குரிய கலைஞரின் நிலைகளாக ஓங்கி உயர்ந்து நமது கட்டடக் கலையின் சிறப்பை விளக்குவனாக அமைந்துள்ளன.

அம்பாளின் ஆலயம் புதியதொரு பரிமானத்தை பெற்று வருகின்றது. குறிப்பிட்ட கால கட்டத்தில் ஆலயம் வளர்ச்சி கண்டிருக்கிறது. இவ்வாலயத்தில் தொண்டர்களின் பங்கு சொல்லில் அடங்காதவை . இவ்வாலயத்தில் தொண்டு செய்தவர்கள் அன்னையின் அருள் பெற்று பிற நாடுகளிலும் சரி இங்கேயும் சரி சீரும் சிறப்புமாக இருப்பதைக் காண்கிறோம். இப்பாரிய திருப்பணியில் பங்கேற்ற யாவருக்கும் அருள் பாலித்தருள வேண்டும் என வேண்டி இவ் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேற வேண்டும் என அம்பிகையை வேண்டி நிற்கிறோம்.

மா. குணசிங்கம்
தலைவர்
இராஜகோபுர திருப்பணி சபை.



இறைவனோடு இணைந்த சக்தியாக விளங்கும் சிவகாமசுந்தரி அம்பாள் கோண்டாவில் தில்லையம்பதியில் அருளாட்சிசெய்து பக்தர்களுக்கு அருளை வாரிவழங்கிய வண்ணம் இருப்பதை நம் கண்ணூடாகக் காண்கின்றோம். இன்று அம்பாளின் அடியவர்களால் மனமுவந்து வழங்கிய பெரும் பொருள் கொண்டு பஞ்ச தள இராஜகோபுரத்தை அமைத்ததையிட்டு பெரும் மகிழ்சியடைகின்றோம். எமது ஆலயத்தில் புதிய வரலாற்றுச்சின்னம் உதயமாகின்றது. மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழ அருள்பாலிக்க வேண்டுமென்று எனது நல்லாசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.

இ.யோகராசா
செயலாளர்,
இராஜகோபுரத் திருப்பணிச்சபை.



கோண்டாவில் தில்லையம்பதியிலே குடி கொண்டு அருளாட்சி புரிகின்ற அன்னை அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதையிட்டு பேருவகை அடைகின்றோம். இது அன்னையின் அளப்பெரிய அருளினால் நவகோண வடிவில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அன்னைக்கு இன்று இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடப்பதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்த அருட்பணிக்குத் தம்மை உட்படுத்திக்கொண்ட அனைத்து அருள் உள்ளங்களுக்கும் அன்னையின் பெருவருள் கிட்ட வேண்டும் என்று ஆசியும் வாழ்த்தும் கூறுகிறேன்.

.த. இரத்தினகுணசிங்கம்
பொருளாளர், இராஜகோபுர திருப்பணி சபை.

வீடியோ



றல் வீடியோ படப்பிடிப்பின் முன்னோடிகள்

ப்புனித நீராட்டு விழாக்கள் திருமண விழாக்கள்
் குறும்படங்கள்

ன் உங்களுடன் இணையும் புலவர் வீடியோ



புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி பி.ஜே.அன்ரனி மங்கல விளக்கேற்றுவதையும், ஆசிரியர்கள் இல்லக்கொடியேற்றுவதையும், மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## கும்பாபிஷேக தின சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த கும்பாபிஷேக தின சங்காபிகேஷம் மணவாளக் கோலத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு 1008 சகஸ்ர மஹா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து காலை 10 மணிக்கு விநாயகப் பெருமானும் வள்ளி, தெய்வானை அம்பாள் சமேதராய் முருகப் பெருமானும் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6.15 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

இளவாலை அருள்மிகு ஆனை விழுந்தான் விக்கின விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மாலை 6மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை அருள்மிகு வேம்படி சித்திவிநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடைபெற்று 31 ஆம் திகதி புதன்கிழமை நிறைவடையவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் தகதி வியாழக்கிழமை 108 சங்காபிஷேகமும் மாலை திருவூஞ்சலும் கிராம பிரதக்ஷிணமும் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A நடத்தும் வெசகிரிய விஞ்ஞான தொல்பொருள் சாஸ்திர செயற்றிட்டம் என்னும் விடயம் பற்றிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10 மணிவரை பௌதீகவியல் விரிவுரை மண்டபம் பிரிவு I இல் நடைபெறவுள்ளது.

இதில் பெரதெனியா பல்கலைக்கழக தொல்பொருட் சாஸ்திர விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.செனவிரட்ண கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 24 ஆம் திகதி காசநோய் தினத்தை முன்னிட்டு வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கேட்டுக் கொள்கின்றார்.புதிய அங்கத்தவர்களும் சமூகமளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## 2010 ஆம் ஆண்டுக்குரிய சீருடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 1 அனுமதி பெற்ற மாணவர்களும், இதுவரை சீருடை பெற்றுக்கொள்ளாத இடம்பெயர்ந்த மாணவர்களுக்குமான சீருடை வழங்கல் இன்றும் நாளையும் (18,19/03/2010) யாழ். வலயக் கல்வி பணிமனையில் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)



எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் இ.சுந்தரலிங்கம் குருநகரில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சதுர்த்தி விரத உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பூசைகள் நடைபெறும் என ஆலய பிரதம குருக்கள் தெரிவித்துள்ளார். (6-4)

## குளிர்த்தி கிராம அருட் பவனி

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு கொக்குவில் ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி மற்றும் கிராம அருட்பவனி நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் மாலை 3.30 மணிக்கு அபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து 4.30 மணிக்கு அம்பிகை காராம்பசு வாகனத்தில் கிராம அருட்பவனி இடம்பெறவுள்ளது.

நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு குளிர்த்தியும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக மா.நகுலேஸ் , பிரதி தலைவராக வே.செல்வராசா, செயலாளராக ப.விஜயகுமார், பிரதி செயலாளராக செல்வன் க.உதயரதன்,பொருளாளராக செல்வன் பொ.யோகேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வ.பத்மநாதன், ச.சிவஞானம் , சி.சின்னத்துரை, செல்வன் செ. அனுஷன் ஆகியோரும் எண் பார்வையாளராக க.கமலநாதன், போஷகராக வே. கதிரேசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (6-4)

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கைக் கழகத்தின் உபசபையும் இணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழாவிற்கு எதிர்வரும் ஏப்ரல் 15 வரை விண்ணப்பிக்கலாம் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

✕✕✕✕✕

நல்லூர் பிரதேச செயலக காணி பயன்பாட்டுதிட்டமிடல் பிரிவால் உலக புவி தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் விழிப் புணர்வு போட்டிக்கான ஆக்கங்களை ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-30)

## பேரூந்து சேவை நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித் துறையூடாக பருத்தித்துறை செல்லும் 751 இலக்க பேரூந்து சேவை இதுவரை தனது இறுதி சேவையை மாலை 6.15 மணிக்கு மேற்கொண்டது. நேற்றைய (17) தினத்திலிருந்து இப் பேரூந்து சேவையின் இறுதி சேவை 7.15 மணிக்கு என மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறையில் இருந்து சரசாலையூடாக சாவகச்சேரி செல்லும் 765 இலக்க பேரூந்து சேவையின் இறுதிச் சேவை இதுவரை பி.ப2 மணிக்கு மேற்கெள்ளப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இப் பேரூந்து சேவையின் இறுதிச் சேவை பிற்பகல் 4.30 மணிக்கு புறப்படும் என மாற்றப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## ஊர்காவற்றுறை மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு, நாரந்தனை , தம்பாட்டி போன்ற கிராமங்களிலுள்ள மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சனை நீண்டகாலமாக நிலவி வந்தது.

இப்பிரச்சினைக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது அல்லைப்பிட்டி பகுதியிலிருந்து ஊர்காவற்றுறை பகுதிக்கு குழாய் மூலம் செல்லும் குடிநீரை இக் கிராமங்களுக்கும் கிடைப்பதற்கு வழி காணப்பட்டுள்ளது. இதற்காக ஈ.பி.டி.பி.யின் செயலாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் தற்போது பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றத் தேர்தலில் (யாழ் மாவட்டத்தில்) போட்டியிடும் வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான செலவுக்கும் தேவைக்குமாக ஒரு இலட்சத்து 54 ஆயிரம் ரூபா பணம் அமைச்சரால் வழங்கப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்த செயற்பாட்டால் இக்கிராம மக்களின் குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படுமென மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (ஓ-22)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ்.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.(ஓ-4)




நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தொழில் அதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம் உரையாற்றுவதையும்,வெற்றி பெற்ற வீர வீராங்கனையுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# மன்னார்,தலைமன்னார் பகுதிகளில் தேடுதல்; வெடிபொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மன்னார், தலைமன்னார் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் உள்ளிட்ட ஒரு தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, மன்னார் வீதியில் புதுக்குளம் பகுதியில் கணேசபுரம் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் அதிகாரிகள் இந்தத் தேடுதலை மேற்கொண்டனர்.

இதன் போது இரண்டு கிலோ கிராம் எடையுடைய குண்டு ஒன்றும் கைக்குண்டுகள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தவிர கறுப்பு நிற சீருடை ஒன்றும் மருந்துவகைகளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தலைமன்னார் கட்டுப்பகுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட மேலும் பல ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஓ-4)

# சூரிய மண்டலக் காற்றலைகளால் செவ்வாயின் வளிமண்டலத்தில் மாற்றம்

சூரிய மண்டல காற்றலைகள் காரணமாக செவ்வாய்க்கிரகத்தின் வளிமண்டலத்திலிருந்த கனரக அணு மூலக்கூறுகள் அகற்றப்பட்டமை புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பிரித்தானிய லெயிஸ்டர் பல்கலைக் கழகத்தின் பௌதிக மற்றும் விண்வெளியியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் மார்க் லெஸ்டர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் சயன்ஸ் டெய்லி விஞ்ஞான ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

மிக வேகமாக சூரிய மண்டல காற்று வேகங் குறைந்த காற்றுடன் மோதுகையுற்று உயர் அழுத்தமுடைய காற்றாலைகள் உருவாக்கப்பட்டதாகவும் இக்காற்றாலைகள் செவ்வாய்க் கிரகத்தை கடந்து செல்கையில் அக்கிரகத்தின் வளி மண்டலத்திலுள்ள அணு மூலக் கூறுகளை அடித்துச் சென்றதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சூரிய மண்டல காற்றாலைகள் தொடர்பான தகவல்களின் பகுப்பாய்வு மற்றும் செய்மதி மூலமான அவதானிப்புகள் என்பனவற்றை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் செவ்வாய்க்கிரகத்தின் வளிமண்டல தோற்றுவாய் மற்றும் கட்டமைப்பை அறிந்து கொள்வதற்கு உதவுவதாக அமைவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஓ-6)

# படகு மூலம் படையெடுக்கும் இலங்கை அகதிகளால் அவுஸ்திரேலிய அரசியலில் பாரிய நெருக்கடி

அவுஸ்திரேலியாவுக்குள் தொடர்ந்தும் படகு மூலம் வரும் இலங்கை அகதிகள் காரணமாக அந்த நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெவின் ரூட்டின் அரசாங்கம் இந்த பிரச்சினை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பாரிய எதிர்ப்புக்களை சந்தித்து வருவதாகவும் அவுஸ்திரேலியாவில் தேர்தல் வருடம் இது வென்பதால் ஆளும் தொழில் கட்சிக்கு அழுத்தங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலிய வானொலி தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் ஊடாக இந்த சட்ட விரோத நட்வடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் எல்லைப்பாதுகாப்பில் தோல்வி கண்டுள்ளதாக அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் டொனி எப்போட் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய பிரதமரின் தகவல்படி கடந்த 10 வாரங்களில் மாத்திரம் 24 படகுகளில் சுமார் ஆயிரத்து 200 பேர் நாட்டுக்குள் பிரவேசித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய 95 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய 95 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் 85 முறைப்பாடுகள் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல் சட்டங்கள் மீறப்பட்ட 8 சம்பவங்கள் இவற்றில் அடங்குவதாகவும் இந்த முறைப்பாடுகள் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கு பொறுப்பான காமினி நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சட்ட விரோதமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் பிரசார பதாகைகள், உருவப்படங்கள் என்பனவற்றை அகற்றும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

சட்ட விரோதமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரசார பதாகைகளில் 45 வீதமானவை அகற்றப்புட்டுள்ளதாக சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி மீண்டும் தனது கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரின் பல கட்டங்களில் இந்தப் பாடசாலை பல்வேறு சிதைவுகளுக்கும் இழப்புக்களுக்கும் உள்ளாகியிருந்தது. தற்பொழுது தடுப்பு முகாம்களிலிருந்து மக்கள் மீள் குடியேற்றத்திற்காக அழைத்து வரப்படும் பொழுது இந்தப் பாடசாலையிலேதான் விசாரணைகள் முடியும் வரை தங்க வைக்கப்படுகிறார்கள். இதனால் மீள தொடங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி வலயக்கல்விப் பணிமனைக்கு சற்று அருகாமையிலுள்ள ரி.ஆர்ரெக் நிறுவனத்திற்குரிய சிறிய கட்டடம் ஒன்றிலேயே தனது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

பாடசாலை தொடங்கிய முதல் நாளே 250 மாணவர்கள் வகுப்புக்களுக்கு வருகை தந்துள்ளனர். மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் உள்ள மாணவர்கள் நீண்ட நாட்களாக பாடசாலை செல்லாமல் இருக்கின்றனர். இங்கு மாணவர்கள் கல்வியை தொடருவதற்கு ஆர்வத்துடன் காத்திருப்பதாகவும் அதே வேளை அவர்கள் கல்வி சான்றுகள் முதல் அனைத்து ஆவணங்களையும் இழந்த நிலையில் இருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் தமக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்க வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் மக்கள் குடியேற்றப்பட்ட பகுதிகளிலும் கூட இன்னும் பல பாடசாலைகள் மீள தொடங்க முடியாத நிலையில் உள்ளன. மீளக்குடியேற்றத்தில் துரிதம் இல்லாத காரணத்தினால் தடுப்பு முகாம்களிலும் மீளக்குடியேற்றப்பட்ட பகுதிகளிலும் பாடசாலைகள் ஒழுங்கில்லாமல் காணப்படுகின்றன. மாணவர்கள், மீளக் குடியேற ஆசிரியர்கள் மீளக் குடியேறாத நிலமைகளும் உள்ளன.

அதேவேளை தடுப்பு முகாம்களிலுள்ள பாடசாலைகளில் கடுமையாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

union assurance
Trust in your tomorrow, today.

வேலை வாய்ப்பு

ஜோன்கீல்ஸ் PLCயின் உறுதிப்பாட்டுடனும் பலத்தின் பின்னணியுடனும் இயங்கும் இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸின்

பதவி வெற்றிடம்

யாழ். பிராந்திய கிளைக்கான (வடமராட்சி பிரதேசம் தவிர்ந்த) வேலையற்றவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து வருகை தந்து தற்போது குடாநாட்டில் வசித்து வரும் வேலையற்று இருக்கும் இருபாலாரும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்

காப்புறுதி ஆலோசகர்

உங்களது வாழ்க்கையை ஒளிமயமாக்க இன்றே இணையுங்கள் யூனியன் அஷ்யூரன்ஸில்

தகைமைகள்:- க.பொ.த உயர்தரத்தில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை) ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் சரளமாகப் பேசக்கூடிய ஆற்றல் விரும்பத்தக்கது. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது

- உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கிப் பணியுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

ஏன் தயக்கம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

நேர்முகத்தேர்வு:- காலம் :- 25.03.2010
நேரம் :- காலை 9.30
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்
தொடர்புகளுக்கு:- 021 222 3753
வலய முகாமையாளர்.

(899)

### நாடாளுமன்ற உறுப்பினர்களின்

# தனிப்பட்ட ஊழியர்கள் மார்ச் மாத சம்பளம் கோரி அழுத்தம்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மார்ச் மாதத்திற்கான சம்பளம் வழங்கப்பட்டுள்ளதால் அவர்களது தனிப்பட்ட ஊழியர்களும் மார்ச் மாதத்திற்கான சம்பளம் கோரி அழுத்தம் கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி கலைக்கப்பட்டதுடன் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்காக கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தை கூட்டினார்.

இதன் காரணமாக நாடாளுமன்றம் மீண்டும் செயற்பட ஆரம்பித்தால் அதன் உறுப்பினர்களுக்கான வாகனங்கள், எரிபொருள் கொடுப்பனவுகள், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட சகல வசதிகளும் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தமது தனிப்பட்ட ஊழியர்கள் மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவுகளை கோருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற விவகார அமைச்சரிடம் கூறியுள்ளனர்.

அமைச்சு இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை கோரியுள்ளதுடன் அது குறித்து தமக்கு தீர்மானிக்க முடியாது எனவும் அமைச்சு கூறியுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக ஒரு தினம் மாத்திரம் நாடாளுமன்றம் கூடிய நிலையில் தமது தனிப்பட்ட ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களது உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர் மாதம் முதல் நாடாளுமன்றம் மாதத்திற்கு ஒரு தடவை மாத்திரமே கூடியுள்ளது. வழமையாக வாரத்தில் 4 முறை நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கிலேயே அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கோருகிறது

### அர்ஜுன ரணதுங்க



(கொழும்பு)

சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கோருவதாக ஜனநாயக தேசிய முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளரும், இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டு மக்களுக்கு நன்மைகளை வழங்குவதனை விடவும் தமது சுயலாப இலக்குகளை அடைவதற்கே ஆளும் கட்சி முனைப்புக் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சாசனமொன்றை அமைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவையில்லை எனவும், எதிர்க்கட்சிகள் அவ்வாறான யோசனைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், அரசாங்கத்தின் இவ்வாறான பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாந்து விடக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நல்ல வழியிலோ அல்லது கெட்ட வழியிலோ பதவியை தக்க வைத்துக் கொள்ள ஆளும் கட்சி அரசியல் வாதிகள் தீவிரம் காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகால பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஜெனரல் சரத் பொன்சேகா தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# பிரதமர் வேட்பாளர் யாரென்பதை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அரசாங்கம் இதுவரையில் தமது பிரதமர் வேட்பாளர் யாரென்பதை அறிவிக்கவில்லை. இது புரியாத புதிராகவே இருக்கின்றது. எனவே உண்மையை அரசாங்கம் மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே ஐ.தே. முன்னணிக்கு பொது மக்கள் பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்து பாராளுமன்ற ஆட்சியமைக்கும் அதிகாரத்தை வழங்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே. முன்னணியில் போட்டியிடும் ஜயந்த டி. சில்வாவை ஆதரித்து பொரளையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

அரசாங்கம் அமைப்பதற்கு பிரதமர் வேட்பாளர் இருக்க வேண்டும். ஆனால், இன்றைய ஆளும் கட்சிக்கு அது கிடையாது. அவ்வாறானவர்கள் எப்படி ஆட்சியமைக்கப் போகின்றார்கள்.

ஆனால், பொது மக்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றனர். இது ஒரு தெளிவில்லாத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே ஐ.தே. முன்னணி ஆட்சி அமைப்பதற்கு மக்கள் ஆணையை வழங்க வேண்டும். யுத்தம் முடிந்து விட்டது. ஆனால், இந்த அரசாங்கம் இன்னமும் மக்களுக்கு சலுகைகளை வழங்கவில்லை.

மாறாக பாராளுமன்றத்தை கலைத்த பின்னரும் அமைச்சர்களுக்கான சலுகைகளை அதிகரித்துள்ளது. இப்போதும் வீட்டு வாடகைக்காக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றை நிறுத்தினால் மக்களுக்கு சலுகைகளை வழங்க முடியும். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியும். ஆனால், எதனையும் இந்த அரசாங்கம் செய்வதில்லை.

இன்று வறுமையின் காரணமாக பிள்ளைகளை பெற்றோரே ஆற்றில் தூக்கியெறியும் நிலைமை உருவாகியுள்ளது. பட்டினியுடன் இருந்து கொண்டு தர்மோபதேசம் கேட்க முடியாது.

அமைச்சர்களின் தொகையை 35 ஆக குறைப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனால் 112 அமைச்சர்களும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அவ்வாறானால் இது எவ்வாறு சாத்தியமாகுமென்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டையும் பொருளாதாரத்தையும் மக்களையும் ஐ.தே. முன்னணியினால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என்றார். (ஓ-6)

# முடி உதிர்வோருக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் குறைவு

### ஆய்வாளர்கள் தகவல்

தலைமுடி உதிர்வோருக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் குறைவாகக் காணப்படுவதாக அண்மைய மருத்துவ ஆய்வொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

30 வயதளவில் முடி உதிரும் ஆண்களுக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுவதாக அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2000 ஆண்களிடம் வோஷிங்டன் மருத்துவ கல்லூரி ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. குறைந்த வயதில் முடி உதிரும் ஆண்களுக்கு புற்றுநோயின் தாக்கங்கள் குறைவாகவே காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வயதை அடையும் ஆண்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முடி உதிர்வுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

# பிரகீத்தின் மனைவி தாக்கல் செய்த மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

எவ்விதத் தகவல்களும் இன்றி காணாமல் போன நிலையிலுள்ள லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஊடகவியலாளரும் கேலிச்சித்திர ஓவியருமான பிரகீத் ஹெக்நேலியகொட இருக்குமிடத்திலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிடுமாறு கோரி அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த மனு ரஞ்சித் சில்வா மற்றும் டி.எஸ்.ரி. லேகம்வசம் ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவில் இரகசியப் பொலிஸாருக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், ஹோமாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளனர். (ஓ-6)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நீர்வேலி தெற்கு கிராமத்தில் CHA நிறுவனத்தால் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி வள நிலைய திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் ஏ. மோகன்றாஸ் மங்கல விளக்கேற்றுவதையும், டபிள்யூ. எச். டபிள்யூ சொய்சா மற்றும் திருமதி சொய்சா ஆகியோர் இணைந்து நிலையக் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் கிராம அலுவலர் சு. சண்முகவடிவேல் நன்றியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# பிஜித் தீவில் சூறாவளித் தாக்கம்; 17 ஆயிரம் பேர் வீடிழந்து தவிப்பு

அவுஸ்திரேலியாவுக்கு அருகே உள்ள பிஜிதீவை நேற்றுமுன்தினம் பயங்கர சூறாவளி தாக்கியது. மணிக்கு 175 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது. 2 நாளில் 14 அங்குல மழை பெய்தது. இதனால் நாட்டில் பெரும் பகுதி வெள்ளக் காடாகியது.

புயல் தாக்கியதில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஏராளமான வீடுகளும் சேதமடைந்தன. இதனால் வீடுகளை இழந்து 17 ஆயிரம் பேர் தவிக்கின்றனர். அவர்கள் 250 நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

புயல் தாக்கியதை அடுத்து நாட்டில் பேரழிவு அறிவிப்பு வெளியிடப்பட்டு அவசர காலச் சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குட்டி நாடான இங்கு 48 சதவீதம் இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)




# கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தி விஷமத்தில் ஈடுபடுவோருக்கு ஐந்தாண்டு சிறை

## பங்களாதேஷில் புதிய சட்டம்

(டாக்கா)

கைத்தொலைபேசியில் ஆபாச படங்களை அனுப்புதல், மிரட்டுதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக ஐந்தாண்டு சிறை மற்றும் மூன்று கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கும் தண்டனையை அமுல்படுத்த பங்களாதேஷ் அரசு முடிவு செய்துள்ளது. அங்கு கைத்தொலைபேசியில் விஷமம் செய்யும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது: எனவே 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கைத்தொலைபேசி சிம்கார்டை விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசியை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இளைஞர்கள் அடையாள அட்டை, பள்ளி சான்றிதழ் உள்ளிட்டவற்றை காட்டி சிம்கார்டை வாங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே கைத்தொலைபேசியை பயன்படுத்தி குற்றம் இழைப்பவர்களை தண்டிக்க ஐந்து ஆண்டுவரை சிறை தண்டனை அளிக்கவும் மூன்று கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் வழி செய்யும் மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய அந்நாட்டு தொலை தொடர்பு ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதற்கான திட்டத்துக்கு அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று இந்த திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. (ஓ-6)

# தாய்லாந்தில் இரத்தம் தெளித்து சாபமிடும் போராட்டம்

தாய்லாந்தில் தேர்தலை நடத்தக் கோரி மூன்றாவது நாளாக போராட்டங்களை நடத்திவரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகர் பாங்கொக்கில் அரசாங்க தலைமை அலுவலகம் மற்றும் பிரதமரின் கட்சியின் அலுவலகம் ஆகியவற்றுக்கு வெளியே தமது இரத்தைத் தெளிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களால் தானமாக வழங்கப்பட்ட இரத்தத்தை பிளாஸ்டிக் போத்தல்களில் வைத்திருந்து அரசாங்க இல்லத்தின் வாசலில் தெளித்து வடியவிட்டு அரசாங்கத்துக்கு அவர்கள் சாபமிட்டார்கள்.



தாய்லாந்தின் தற்போதைய அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்படாததால் அது சட்டவிரோதமாகவே பதவிக்கு வந்துள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள். (ஓ-6)

# பசுபிக் கடலில் 5.4 சதுர மைல் அளவுக்கு உருவாகியுள்ள குப்பைத்தீவு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தருகே உள்ள பசுபிக் கடலில் பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான தொன் குப்பைகள் சேர்ந்து தீவு உருவாகியுள்ளது. இதனால் இந்தப் பகுதியில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கலிபோர்னியாவுக்கும் ஹவாய் தீவுக்கும் இடையே உள்ள பசுபிக் கடலில் நீரின் சுழற்சி வேகம் அதிகம் உள்ளது. இதனால் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள பொருட்கள் கூட இந்த பகுதிக்கு இழுத்து வரப்படுகின்றன.

கடந்த 60 ஆண்டுகளாக பல்வேறு பகுதிகளிலிருந்து இந்த இடத்தில் குப்பைகள் சேரத் தொடங்கின. கடந்த 20 ஆண்டுகளில் குப்பைகளின் அளவு பல மடங்கு சேர்ந்து விட்டன. பிரிட்டன்தீவை போல ஆறு மடங்கு அதிகமாக இங்கு குப்பைகள் சேர்ந்து விட்டன. பிளாஸ்டிக் பொருட்கள், விளையாட்டு பொருட்கள், பொம்மைகள், தண்ணீர் போத்தல்கள், குளிர்பான டப்பாக்கள் என ஒரு தீவு அளவுக்கு குப்பைகள் சேர்ந்து விட்டன. இந்தப் பகுதியில் வளரும் மீன்களின் வயிற்றில் குப்பைகளின் துகள்கள் உள்ளன சமீபத்திய ஆய்வில் ஒரு மீனின் வயிற்றிலிருந்து 26




பிளாஸ்டிக் துண்டுகள் எடுக்கப்பட்டன.

இந்த தீவு கூட்டம் கடல் வாழ் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் கெடுதலை விளைவிக்கும் என சுற்றுச்சூழல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். பிளாஸ்டிக் பொருட்களை சாப்பிடும் மீன்களை மனிதர்களும் சாப்பிட்டால் அதனால் உடல் நிலை பாதிப்பு உண்டாகும். எனவே இந்த குப்பை தீவை என்னசெய்யலாம் என தீவிர ஆலோசனை நடக்கிறது. சான்பிரான்சிஸ்கோ மற்றும் கொங்கொங்கை சேர்ந்த சுற்றுச் சூழல் வல்லுனர்கள் பசுபிக் கடலில் சேர்ந்துள்ள குப்பைகளை கப்பல்களில் எடுத்து வந்து எரிசக்தி பொருளாக மாற்றலாம் என கருத்து தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# அழிந்துபோன யானைப் பறவையை முட்டையில் இருந்து உயிர்ப்பிக்க முயற்சி

(மடகஸ்கார்)

உலகின் மிகப் பெரிய பறவையாக கருதப்பட்ட யானைப் பறவையான (எலிபண்ட் பேர்ட்) 300 ஆண்டுகளுக்கு முன் பிரஞ்சு காலனிக்காரர்களால் அழிந்து போனது. மடகஸ்காரை சேர்ந்த இந்த பறவையினம்



அதன் பாதுகாக்கப்பட்ட முட்டையின் ஓட்டில் இருந்து எடுக்கப்படும் டி.என்.ஏ.வின் மூலம் மீண்டும் உயிர் பெறலாம் என கருதப்படுகிறது. நெருப்புக் கோழி மற்றும் ஈமு வகை கோழியை போன்று உருவ அமைப்புடன் அளவில் மிகவும் பெரியதாக காணப்படுவது யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்). இது 10 அடி உயரமும் அரை தொன் எடையும் கொண்டது. ஆபிரிக்காத் தீவுகளில் பிரெஞ்சுக்காரர்கள் குடியேறும் வரை இவ்வகை பறவை அங்கு காணப்பட்டது. அவர்கள் குடியேறிய சில ஆண்டுகளிலேயே இந்தப் பறவை இனம் இறைச்சி மற்றும் முட்டைக்காக தொடர்ந்து வேட்டையாடப்பட்டதால் காலப்போக்கில் அழிந்து போயின. இந்த பறவையின் முட்டை சாதாரண கோழி முட்டையை விட 160 மடங்கு பெரிது. தற்போது காணப்படும் ஈமு கோழியை விடப் பெரியது. மூக்கு குத்தீட்டி போல பெரியதாக இருக்கும்.

மடகஸ்காரின் தெற்கு பகுதியில் அமைந்திருந்த இந்த பறவைகளின் பழைய கூடுகளில் காணப்பட்ட முட்டை ஓடுகளை ஷெப்பீல்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். அழிந்து போன பறவை இனங்களான நியூசிலாந்து நாட்டை சேர்ந்த மோவா மற்றும் மடகஸ்கார் பகுதியை சேர்ந்த யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்) போன்ற பறவையினங்களின் முட்டை ஓடுகளில் இருந்து அவற்றின் மரபணுவை பிரித்தெடுக்கும் முறையை விஞ்ஞானிகள் தற்போது கண்டறிந்துள்ளனர். அவ்வாறு வெற்றிகரமாக டி.என். ஏ.வை பிரித்தெடுத்து அதன் மூலக் கூறுகளைக் கண்டறிந்தால் அதன் மூலம் அழிந்து போன பறவை இனங்களை போன்ற தோற்றம் கொண்ட ஒன்றை குளோனிங் மூலம் உருவாக்கும் வாய்ப்பு உள்ளது.

இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில், முட்டை ஓடுகளில் இருந்து பழமையான டி.என். ஏ.வை பிரித்தெடுப்பது தான் தொல்பொருள் மற்றும் புதைபடிவ ஆராய்ச்சியில் இருக்கும் முக்கியமான ஒன்று.. பழமையான டி.என்.ஏ. படிவங்களை போதுமான அளவு பெறுவது மிகவும் சவாலாக உள்ளது. பொதுவாக அழிந்துபோன இனங்களின் புதைபடிவங்கள் ஆகியவை எங்காவது சில இடங்களில் சிறிதளவே உள்ளது என்றார்.

இந்த யானைப் பறவை (எலிபண்ட் பேர்ட்) மிகப் பெரிய கால்கள், கூர்மையான நகங்கள், நீண்ட சக்தி வாய்ந்த கழுத்து மற்றும் ரோமம் போன்ற இறகுகளால் மூடப்பட்டு காணப்படும். பார்க்க மிகவும் பெரிதாக பயமுறுத்தும் தோற்றத்துடன் இப்பறவை காணப்பட்டாலும் இதன் உணவு தாவரங்கள். மடகஸ்கார் பகுதியில் இந்த பறவை ஆறு கோடி ஆண்டுகள் வாழ்ந்துள்ளன என்றார். (ஓ-6)

# 10 இலட்சம் மதிப்புள்ள வைரத்தை விழுங்கிய நாய்

## அமெ. மேரிலேண்டில் சம்பவம்



நகைக் கடை வைத்திருந்த ஒருவரின் வளர்ப்பு நாய் பத்து இலட்சம் மதிப்புள்ள வைரத்தை விழுங்கிய சம்பவம் அமெரிக்க மேரிலேண்டில் நடந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள மேரிலேண்டில் ரொபர்ட் பெர்னான் ஜுவலரி என்ற நகைக் கடை நடத்தி. வருபவர் ஜோர்ஜ் கவுப்மேன். இவரது வளர்ப்பு நாயான சோழி எப்போதும் இவருடன் நகைக் கடையிலேயே இருக்கும்.


ஜோர்ஜும் அவரது பங்காளியும் ரூபா 10 இலட்சம் மதிப்புள்ள மூன்று கரட் வைரங்களை மேசையில் வைத்து பார்த்துக்கொண்டிருந்தனர். தற்செயலாக மேசை சுழலவே வைரங்கள் தரையில் விழுந்தன.

அப்போது அங்கு வந்த சோழி ஏதோ சாப்பிடும் பொருள் என நினைத்து விழுங்கிவிட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஜோர்ஜும் அவரது பங்காளியும் வைரத்தை எப்படியாவது வெளியே எடுக்க வேண்டும் என நினைத் தனர்.

ஜோர்ஜ் டாக்டர்களிடம் நாயை அழைத்துச் சென்றார்.

ஆனால் டாக்டர்கள் ஒன்றும் செய்ய முடியாது . இயற்கையாக மலம் மூலம் வெளியே வந்து விடும் என்று கூறிவிட்டார்கள். அதன்படி மூன்று நாள் கழித்து இயற்கையாகவே வைரம் வெளியே வந்துவிட்டது. அதன் பிறகு தான் ஜோர்ஜும் அவரது பங்காளியும் நிம்மதி அடைந்தனர். (ஓ-6)





நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட தொழிலதிபர் பொ. துரைராசா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும் கணனி மேசை அன்பளிப்பு செய்யும் நிகழ்வில் பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் கு. சிவபாலன் பாடசாலை அதிபரிடம் கையளிப்பதையும் அருகில் சிரேஸ்ட வேலைப் பரிசோதகர் ரி. இரவீந்திரதாஸ், கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சித்திரவடிவேல் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அடிப்படை உரிமை மீறல் மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நாளை வெள்ளிக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது. 18 எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி பாராளுமன்றம் மீளவும் கூட்டப்பட்டதாகவும் இதன் படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு மீண்டும் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தரே வழங்கப்பட்டிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திலக் மாரப்பன ஆஜரானார். பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய, அமைச்சுப் பாதுகாப்புப்பிரிவு பொறுப்பு அதிகாரி, பாதுகாப்புச் செயலாளர், சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறைந்த பட்சம் நான்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களேனும் பாதுகாப்பிற்காக வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட காலத்திலும் ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த மனு மீதான விசாரணைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஓ-6)

## நுரைச்சோலை அனல் மின் நிலைய இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

சீனாவின் நிதி உதவியில் தென்மேற்கு பிரதேசமான நுரைச்சோலை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் அனல் மின்நிலையத்தின் இரண்டாம் கட்ட பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

நுரைச்சோலை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அனல் மின்னிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. முதலில் மூன்று கட்டங்களாக திட்டமிடப்பட்ட இந்த பணிகள் தற்போது இரண்டு கட்டங்களாக மாற்றப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பிக்கப்படும் இரண்டாம் கட்ட பணிகள் 2013 ஆம் ஆண்டு நிறைவடையும். 900 மெகாவற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தகைமையுள்ள இந்த நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு சீனா 891 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

சீனாவின் எக்சீம் வங்கி அதனை வழங்கியுள்ளது. இலங்கை அரசும் இந்த மின் நிலையத்திற்கு 10 பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது என அது மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-6)

## இம்மாதத்தில் 1500 குடும்பங்களை மீள்குடியமர்த்தத் திட்டம்

### கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கு இணங்க மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் இம்மாதத்தில் 1500 இற்கு மேற்பட்ட குடும்பங்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவை ஐந்து கட்டங்களாக இடம்பெற உள்ளதாகவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.


கிளிநொச்சி மாவட்டத்தில் மிதி வெடியகற்றப்பட்டு வரும் பிரதேசங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளது. நாளை 19 ஆம் திகதி ஏ-9 வீதி கிழக்குப் பிரதேச கிராமங்களில் 350 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதுடன் இம்மாதத்தில் ஐந்து கட்டங்களாக மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முன் னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஏ-9 வீதிக்கு மேற்குப் புறமாகவுள்ள உமையாள்புரம், குமாரபுரம், பரந்தன் கிராமங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நாளை முரசுமோட்டை, கோரக்கன் கட்டு கிராமங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

## ஊர்காவற்றுறை பிரதான சந்தியில் மதுபான நிலையம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதான சந்தியில் கூட்டுறவுகள் முன்பாக மதுபான நிலையம் இருப்பதால் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றுக்கு செல்பவர்கள் இதனால் பாதிக்கப்படுவதாக தெரிய வருகின்றது. (ஓ-72)

## ஈழத்து சித்தர் பாரம்பரையில் செல்லப்பா சுவாமிகள்



இந்து சமயத்தில் காலத்துக்கு காலம் பல சித்தர்கள் தோன்றி சமயத்தை வளம்படுத்தியுள்ளனர். சித்தர்கள் யார் என நோக்கும் போது பல வகையாக வரைவிலக்கணப்படுத்தினர்.

"சித்" என்றால் அறிவு. எனவே அறிவே வடிவானவர்கள் சித்தர்கள் என்றும் அட்டமா சித்திகளில் கை தேர்ந்தவர்கள் என்றும், யோக மார்க்கத்தில் வல்லவர்கள் என்றும் சாதி, சமய ஆசாரக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவர் எனவும் கூறப்படுகிறது. இதைவிட நன்மை, தீமை அற்றவர்கள் என்று எல்லாம் சித்தர்களின் இயல்புகளை வரைவிலக்கணப்படுத்தினர்.

இயற்கையில் உள்ள உப்புக்கள், உலோகம் பாசாணங்களின் தன்மைகளை ஆராய்ந்து உடலை பாதுகாக்கும் மருந்துகளை சித்தர் உருவாக்கியதால் "சித்த மருத்துவம்" தோற்றம் பெற்றது. 18 சித்தர்கள் தமிழகத்தே தோன்றியுள்ளனர்.

இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி ஈழத்து சித்தர் பரம்பரை தோன்றியது. கடையிற் சுவாமி, நவநாதசித்தர், செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, பெரியானைகுட்டி, சித்தானைகுட்டி, சித்தர் போன்றோர் சிறப்பானவர்கள்.

**இன்று செல்லப்பா சுவாமிகள் குருபூசை தினமாகும்**

இவர்களில் செல்லப்பா சுவாமியை எடுத்து நோக்கும் போது "ரிஷிமூலம் நதி மூலம் பாராதே" என்பதற்கு இணங்க பூர்வாச்சிரமத்தை அதிகம் நோக்காது செல்லும் போது செல்லப்பன் எனும் இயற் பெயருடன் நல்லூரில் தோன்றினார்.

இவரது மூதாதையர் வட்டுக்கோட்டையில் இருந்து விவசாயம் செய்ய நீர்வளம் நிலவளமுடைய நல்லூரில் குடியேறினர்.

தந்தை வல்லிபுரம், தாய் பொன்னம்மா. செல்லப்பன் சிறிது காலம் யாழ்ப்பாண கச்சேரியில் ஆராட்சியாளராக பணிபுரிந்து வெகுவிரைவிலேயே தந்தை, தாய், ஊர், பேர், தொழில் அனைத்தையும் துறந்து உலகிற்கோர் உத்தமரானார்.

இவரது குரு கடையிற்சுவாமி. கடையிற் சுவாமி ஒரு கடலைக்காரியிடம் இருந்து ஒரு ரூபா பெற்று அதை வெற்றிலையில் மடித்து செல்லப்பா சாமியிடம் கொடுத்து தலைமேல் குடையை வைத்து அசைத்துவிட்டு ஓடும்படி கூறினாள்.

இதுவே அவரது ஞான உபதேசமாகும். கடையிற் சுவாமி நல்லூர் வீதியால் செல்லும் போது செல்லப்பா சுவாமி விலங்கிடப்பட்டு இருந்தார். கிட்டச்சென்று உற்று நோக்கி 'முற்றிவிட்டது' என்றார். அவிழ்த்து விடுமாறு கூறினார். ஏனெனில் 'தெய்வீக பற்று' தெளிவாக முதிர்ந்து இருந்தது.

செல்லப்பரின் விசர் கோலம் என்னவெனில் தேர்முட்டியிலே இருந்து வீதியால் செல்வோரை சின்னத்தனமாய் பேசுவார். தொடர்ந்து வேண்டுமென்றே ஏசுவார். இல்லங்கள் தோறும் சென்று பிச்சை கேட்டு உண்பார். கண்துயில்வது குறைவு. கையை தலையணையாக வைத்து உறங்குவார். இவரிடம் பனையோலை, தென்னோலை கொண்டு நூதனமாக பொருள் இழைக்கும் வல்லமை கொண்டு இவர் விசரனல்லர் என்பது புலனாகிறது.

நெற்றியில் பொட்டில்லை, காவியில்லை, நீறணியவில்லை, நாய் போல திரிவார். யாராவது அறிவில் நாட்டம் கொண்டு கிட்ட வந்தால் 'நாமறியோம்' என நகை செய்வார். 'ஆரறிவார்' என அதட்டுவார் இவருக்கு நெருக்கமாய் இருந்த பாலரும் பண்டிதரும் நாவலரும் செல்லப்பரின் அந்தரங்கத்தை அறிய முடியவில்லை. மாறாக 40 வருடம் தான் எடுத்த கோலத்திலேயே வாழ்ந்து வந்தார்.

இவரது சீடர் யோகர் சுவாமிகள். முதல் முதல் கொழும்புதுறை வாசிகள், துரையப்பா, விதானையார் போன்றோருடன் இளைஞன் யோகர் சுவாமி தரிசிக்க சென்றபோது யோகர் சுவாமியை நோக்கி இடி போன்ற குரலில் 'யாரடா நீ' என அதட்டினார். இதுவோ 'ஆத்மாவே நாம்' எனும் நாத ஒலியாகும். பின் செல்லப்பா 'நல்லதப்பா வா உன்னை போன்ற ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என வாக்கிய பிரசாதம் செய்தார். பின் யோகரும் இவரது சீடரானார்.

இச் செல்லப்பா சுவாமியின் மகாவாக்கியங்கள் ஆவன. எல்லாம் 'செப்படி வித்தை', 'அப்படியே உள்ளது', 'ஒரு பொல்லாப்பும் இல்லை', 'முழுவதும் உண்மை', 'ஒருவருக்கும் தெரியாது', 'ஆரறிவார்' போன்றது ஆகும். இதுவே பின்நாளில் யோகர் சுவாமியின் மகாவாக்கியமாக மாறியது எனலாம். பின் 1915 பங்குனி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் மகா சமாதி அடைந்தார்.

கு. கோபிராஜ்
சண்டிலிப்பாய்

நெஞ்சில் உரமின்றி நேர்மை திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி– கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி –பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஏப்ரல் 4 தொடக்கம் 15 வரை

# இலங்கையில் சூரியன் உச்சநிலையை அடைவதால் வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் ஏப்ரல் 4 தொடக்கம் 15 வரையான காலப்பகுதியில் சூரியன் உச்ச நிலையை அடைவதனால் தற்போது உணரப்படும் வெப்பத்தை விட அதிகளவு வெப்பநிலையினை தோற்றுவிக்கும் காலப் பகுதியாக அமையும் என திருநெல்வேலி வழிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காணப்படும் வெப்பநிலையின் அளவு 35 பாகை செல்சியஸாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நீள் வட்டப் பாதையில் சூரியனை நெருங்கி பூமி வரவுள்ள எதிர்வரும் நாட்களில் சூரியன் உச்ச நிலையினை அடைவதனால் அந் நாட்களில் 36, 37 பாகை செல்சியஸாக வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளது. இவ் வெப்பம் இலங்கையில் உள்ள மாவட்டங்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி காலி,கக்மன,தங்காலையிலும் 6ஆம் திகதி வேருவல, திஸ்ஸமகாராம, தனமவவிலும் 7ஆம் திகதி மொறட்டுவ , கப்புவெல ,கொடியாகமவிலும் 8ஆம் திகதி நீர்கொழும்பு, கேகாலை ,கண்டி ,இங்கினியாகல, அக்கரைப்பற்றிலும் 9ஆம் திகதி சிலாபம், விங்கிரிய,வளவ,யக்கல,புல்லுமலையிலும் 10ஆம் திகதி மதுரங்குளி,அம்பன்பொல, பொலனறுவை, வாழைச்சேனையிலும்11ஆம் திகதி நொச்சியாகம, வெருகலிலும் 12ஆம் திகதி கெப்பிட்டிக்கொலாவ, கோமரன் கடவல, நிலாவெளியிலும் 13ஆம் திகதி மன்னார், நொச்சிக்குளம்,கொக்குளாயிலும் 14ஆம் திகதி கச்சதீவு, டெவில் பொயின்ற்,அடம்பன்,கிளிநொச்சியிலும் 15ஆம் திகதியே இறுதியாக யாழ்.மாவட்டத்தில் காரைநகர், சுன்னாகம் ,குடத்தனை போன்ற இடங்களில் நண்பகல் 12 .11 மணிக்கு உச்சநிலையினை அடையவுள்ளது.

இக்காலப்பகுதியில் வரட்சியினால் தண்ணீர் தட்டுப்பாடு , தொற்றுநோய்கள், சுவாச நோய்கள் என்பன ஏற்படும். நோய்களால் சிரமப்படும் குழந்தைகள் ,வயோதிபர்கள் ,ஆஸ்மா நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பாக இருப்பது மிகச் சிறந்தது.

ஆனால் இம்மாதம் , அடுத்தமாதம், ஒக்டோபர் ,நவம்பர் ஆகிய காலத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும் காலமாக எதிர்வு கூறப்படுவது வழமைக்கு மாறாகவே இந்நிகழ்வு இடம்பெறுவதாக அவதானிகள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் சூரியன் உச்ச நிலையை அடைவது வருடத்தில் 2 முறை நிகழ்வதாகும். (ஓ-30)

## வேட்பாளர்களை சமாளிக்கும் வல்லமை தாராயோ பராசக்தி!

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும். இது பாரதியின் பாடல் வரிகள்.

பாரதியின் பாடலை எல்லாம் நாம் இப்போது பாடமுடியாது.

நாம் பாடுவதாக இருந்தால், வேட்பாளர்களைச் சமாளிக்கும் வல்லமை வேண்டும் பராசக்தி வல்லமை வேண்டும் என்றுதான் பாட முடியும்.

அந்தளவிற்கு வேட்பாளர்களை சமாளிக்க வேண்டிய தேவை உண்டு.

சமாளிப்பென்பது வாக்காளர்களுக்கு கடினமானது. அதிலும் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் கடினமானது. அஃதிலும் நடுநிலை பேணும் பத்திரிகைகளுக்கு மிகமிகக் கடினம்.

எந்த வேட்பாளர்களையும் பகைக்காமல் பத்திரிகையை நடத்த வேண்டும் எனினும் அது சாதாரணமான விடயமன்று.

ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற அருமையான பழமொழிக்கு ஆட்பட்டு தத்தளிக்கும் எம் பரிதாப நிலை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னதாகத் தீரப்போவதில்லை.

என்ன செய்வது! ஏகப்பட்ட வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சி அல்லது ஒவ்வொரு சுயேட் சைக்குழு. பரவாயில்லையே என்று விட்டு விடலாம். அதுதான் இல்லை.

ஒவ்வொரு கட்சியிலும் உள்ள பன்னிரண்டு பேரும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு கொள்கை.

கட்சியின் கொள்கையோடு அவர்கள் உடன்படுகிறார்களா என்பதை அறிந்து கொள்வது கூட பேரும் கஷ்டமாக உள்ளது.

அதிலும் சில வேட்பாளர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதே தெரியாமல் உள்ளது.

வேட்பாளர்கள் பேசுவது வாக்காளர்களுக்கு புரியாமல் போனால் பரவாயில்லை. சில வேட்பாளர்கள் பேசுவது அவர்களுக்கே புரியாமல் உள்ளது.

அட! இங்குதான் மிகப்பெரும் தத்துவம் உள்ளது. வேட்பாளர் பேசுவது வாக்காளர்களுக்குப் புரியாமல் போனால் அது தத்துவம்.

மாறாக பேசுகின்ற வேட்பாளருக்கே தான் என்ன பேசுவதென்று விளங்காமல் இருந்தால் அது மகா தத்துவம்.

ஆக, இங்கு தேர்தல் பிரசாரம் தத்துவங்களாகவும் மகாதத்துவங்களாகவுமே இருக்கின்றன.

இவற்றைப் புரிந்து கொள்வதற்கு பூச்சியத்திற்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருக்கின்ற அந்த இறைவன் உதவவேண்டும்.

## காசநோய்த் தினப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

காசநோய்த்தினத்தை முன்னிட்டு க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான காசநோயும் யாழ்ப்பாணமும் என்னும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியும் தரம் 8 மாணவர்களுக்கான சித்திரப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 24ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## நகரங்களில் வாகன நெரிசலைக் குறைக்க கிருலப்பனை ஆற்றில் படகுச்சேவை

(கொழும்பு)

கொழும்பில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கிருபலப்பனை ஆற்றில் பயணிகள் படகுச் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக் கிணங்க கடற்படையினர் இயற்கைச் சூழலில் அமைந்த இந்த படகுச் சேவையை ஆரம்பித்துள்ளனர். நாவல திறந்த பல்கலைக்கழகத்துக்கு அருகாமையிலிருந்து வெள்ளவத்தை வரையில் தினமும் நான்கு படகுகள் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பூரண பாதுகாப்பு உபகரணங்களுடன் காலை 7.45 முதல் 9.00 மணிவரையிலும் பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணிவரையிலும் இச்சேவை தினமும் நடைபெறுகின்றது.

திறந்த பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கு முதற்கட்டமாக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நீர்போக்குவரத்து வசதிகளை மறுசீரமைத்து இவ்வாறான மேலும் பல பயணிகள் சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது. (ஓ-6)

## தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக் கொடை நிறுவன வளாகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நிறுவன பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதிகளான மு.திருநாவுக்கரசு, திருமதி சரோஜினி இளங்கோவன், இலங்கை வங்கியின் வடமாகாணத்தின் இளைப்பாறிய பொதுமுகாமையாளர் என்.சிவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

## தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

(இராமேஸ்வரம்)

இலங்கை கடல் பகுதிக்குள் செல்ல முய ன்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தடுத்து விரட்டியடித்துள்ளனர்.

சோனியா வருகையையொட்டி இரண்டு நாட்கள் மீன்பிடிக்கச் செல்லாமல் இருந்த மண்டபம், பாம்பன், இராமேஸ்வரம், விசைப் படகு மீனவர்கள் வழக்கம்போல் படகில் மீன்பிடிக்கச் சென்றனர்.

இலங்கை கடல்ப்குதிக்குள் செல்ல முயன்ற இவர்களை இலங்கை கடற்படை யினர் தடுத்து விரட்டியடித்துள்ளனர். (ஓ-6)


# எண்ணம் சுத்தம் வேண்டும் – பாபா

மனிதனின் மாற்றங்கள் அவன் மனதில் தோன்றும் எண்ணங்களிலேயே தங்கியுள்ளது என்கிறார் – பாபா. தாய், தந்தையின் குணவியல்போடு ஒரு குழந்தை பிறந்து வளர்ந்தாலும் அக்குழந்தை வாழும் சூழலே எண்ணங்களை உருவாக்குகின்றது. ஊனத்தில் எண்ணங்கள் சுத்தம் இல்லையாயின் நாம் புறச் சுத்தம் செய்து காணும் பான் ஒன்றும் இல்லை.

மனித சமூகத்தில் எத்தனையோ கொண்டாட்டங்கள் அமையப் பெற்றுள்ளன. உதாரணமாக புது வருடப்பிறப்பை எடுத்துக் கொண்டால் அன்றைய நாளில் நீராடி, புத்தாடையுடுத்து, புதுவகை உணவு தயாரித்து,புறவகைச் சுத்தங்கள் செய்கின்றோம்.

புறத்தைப் போலவே அகமும் அமைய வேண்டும் என்பதையே வருடப்பிறப்பு முதலான பண்டிகைகள் சாற்றுகின்றன. புறச்சுத்தங்கள் செய்து பண்டிகைகள் கொண்டாடப்பட்டால் ஏதோபுதிய பலன்கள் நம்மைச் சேரும் என எண்ணுகின்றோம்.

பலன்கள் எல்லாம் எண்ணங்களை,செயல்களைச்சேர்ந்தவை. நாங்கள் நினைப்பதெல்லாம் எங்களிடமே திரும்ப வரும். எனவே நல்ல எண்ணங்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தவறான எண்ணங்களை அடியோடு விரட்ட எந்த சக்தியையும் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை. நாம் தீயதை மறந்தால் நல்லது நம்மிடம் தானாகவே உருவாகும் என அருளுகின்றார் பாபா.



இப்போது இறை பக்தி யென்பது வரைவுக்குட்பட்ட தொன்றாக நினைத்து நாம் நடந்து கொள்கின்றோம். நீராட வேண்டும். சுத்தமான ஆடை அணிய வேண்டும். கோயில் சென்று இறைவனுக்கு மலர்கள் சாற்றுதல், கற்பூரம்,மெழுகுதிரி கொழுத்த வேண்டும். இது ஒரு வழமை. இதுவே கடவுள் பக்தி என எண்ணகிறோம். ஆனால் எண்ணம், தூய்மை இல்லாமல் உள்ளம் அழுக்கோடு இறை வணக்கம் என்பது அர்த்தமற்றது என்கிறார் பகவான் பாபா.

ஜெய்சாயிராம் யாதவன்

# தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது கடினம்

## வெளியுறவுச் செயலர் நிருபமாராவ்



தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடங்குவது கடினமானது என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

6 நாட்கள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள நிருபமாராவ் வோஷிங்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பாகிஸ்தானிலுள்ள சில குழுக்கள் இந்தியாவுக்கு எதிராக வன்முறைகளையும் பகை உணர்ச்சியையும் தொடர்ச்சியாக தூண்டி வருகின்றன. ஜமாத் - உத் - தவா, லஷ்கர் மற்றும் ஹபீஸ் சயீத் போன்ற பெயர்களை குறிப்பிட நான் விரும்பவில்லை.

அதே சமயம் இவர்கள் வெளிப்படையாகவே ஊடகங்கள் மூலம் இந்தியாவுக்கு எதிராக பேசவும் தங்களது வன்முறை திட்டங்களை அறிவிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதனால் எங்கள் மக்கள் கவலையடைகிறார்கள். நாம் நீண்ட காலமாக மிக அதிகமாகவே பாதிக்கப்பட்டுள்ளோம் என்ற பொதுவான எண்ணம் இந்திய மக்களிடையே உள்ளது.

அதேசமயம் இந்தியா தொடர்ந்து கட்டுப்பாட்டுடன் பொறுமையாக இருப்பதை அதன் பலவீனம் என்று கருதக்கூடாது. பாகிஸ்தானின் தீவிரவாத திட்டங்களை எதிர் கொள்கிற திறன் இந்தியாவுக்கு உள்ளது.

எனவே, தற்போதுள்ள இந்த சூழ்நிலையில் இவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடங்குவது கடினம். அதே சமயம் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கதவுகள் ஒருபோதும் மூடப்படவும் இல்லை என்றார். (ஓ-6)




# ஆயிரம் ரூபாய் நோட்டுக்களால் பிரமாண்டமாலை மாயாவதியின் ஆடம்பர விழாவால் சர்ச்சை

(லக்னோ)



பகுஜன் சமாஜ் கட்சியின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் ஆயிரம் ரூபாய் நோட்டுகளால் உருவாக்கப்பட்ட பிரமாண்ட மாலையை மாயாவதிக்கு அணிவித்தது பெரும் ஆச்சரியத்தையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விழாவு க்கு 200 கோடி ரூபாய் அரசு பணம் செல விடப்பட்டதாக காங்கிரஸ், சமாஜ் வாடி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன.

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவரும், உ.பி. முதல்வருமான மாயாவதி, பிரமாண்டங்களுக்கு பெயர் பெற்றவர். கட்சி மாநாடாக இருந்தாலும் சரி, தனது பிறந்த நாள் கொண்டாட்டமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினரை ஆச்சரியப்படுத்தும் வகையில் பிரமாண்டமான ஏற்பாடுகளைச் செய்து அசத்தி விடுவர்.

தனது பிறந்த நாள் கொண்டாட்டங்களின் போது பிரமாண்ட விழா நடத்தி கட்சித் தொண்டர்களிடம் இருந்து நிதி பெறுவதை வழக்கமாக வைத்திருந்தார். வருமான வரித் துறை அதிகாரிகள் இவரிடம் செலவு கணக்கு கேட்டபோது, கட்சித் தொண்டர்கள் பிறந்த நாளுக்காக அளித்த நிதியைத் தான் செலவிட்டேன் என கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். தற்போது மீண்டும் அவர் ஒரு சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் லக்னோவில் கடந்த திங்கட்கிழமை நடந்தன.

இந்த விழாவில் பகுஜன் சமாஜ் கட்சியினர் மாயாவதிக்கு போட்ட பிரமாண்ட மாலை தான் தற்போது தேசிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாலை முழுவதும் ஆயிரம் ரூபாய் நோட்டுகளால் உருவாக்கப்பட்டது.

தூரத்தில் இருந்து பார்த்தவர்கள் முதலில் இதை மலர்களால் உருவான மாலை என்று தான் நினைத்துக் கொண்டிருந்தனர்.


அப்புறம் தான் இது பணத்தால் உருவாக்கப்பட்ட மாலை என தெரியவந்தது. இதற்காக கோடிக்கணக்கில் பணம் பயன்படுத்தப்பட்டு இருக்கும் என கூறப்படுகிறது.

உ.பி. மாநில அமைச்சர் நசிமுதின் சித்திக் கூறுகையில்,

லக்னோவைச் சேர்ந்த கட்சியினர் தான் இந்த மாலையை உருவாக்கினர். இந்த மாலைக்காக 21 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது.

கட்சியினர் அனைவரின் பங்களிப்புடன் இந்த மாலை உருவாக்கப்பட்டது என்றார்.

இதற்கிடையே இந்த பிரமாண்ட மாலை தொடர்பாக வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணையை தொடக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. (ஓ-6)



சென்னை தி.நகர் திருப்பதி தேவஸ்தானத்தில் *யுகாதி* தெலுங்கு புத்தாண்டை முன்னிட்டு பெருமாளின் பாதங்களில் 108 தங்க (தாமரை) புஷ்பங்களை வைத்து சிறப்பு பூஜை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# சேது சமுத்திரத் திட்டத்தில் சீனாவின் தலையீடு மாற்றுப்பாதை ஆய்வில் பிரச்சினைகள் ஏற்படலாம்

சேது சமுத்திர திட்டத்தின் மாற்று பாதை ஆய்வை. இலங்கை கடற்படையினர் தீவிரமாக கண்காணிக்க தொடங்கியுள்ளனர். இந்திய கடல் வழி போக்குவரத்தை மேம்படுத்தும் விதமாக சேது சமுத்திரம் திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது.

இந்தியாவின் கடல்வழி போக்குவரத்து மேம்பாடு வளர்ந்த நாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. குறிப்பாக சீனாவுக்கு இத்திட்டம் நிறைவேறுவதில் பல்வேறு சிக்கல் எழுந்தன. இலங்கையுடன் உள்ள நட்புறவை பயன்படுத்தி திட்டத்தின் பாதகங்களை அறியும் முயற்சிக்கு தயாரானது.

இதற்கிடையில் வழித்தடத்தில் இராமர் பாலம் வருவதாக சர்ச்சை எழுந்து நீதிமன்ற விசாரணைக்கு சென்றது. மாற்று பாதையில் திட்டத்தை நிறைவேற்றும் சாராம்சங்களை கண்டறியுமாறு மத்திய அரசுக்கு உயர் நீதிமன்ற அறிவுறுத்தியது.

அதன்படி மாற்றுப்பாதை ஆய்வுகள் தற்போது மன்னார் வளைகுடாவில் நடந்து வருகின்றது.தேசிய கடல் ஆராய்ச்சி மையத்தினர் இதற்கான பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆராய்ச்சிக்கான பிரத்தியேக மிதவைகள் கடலில் பல இடங்களில் நிறுவப்பட்டு அதை கண்காணிக்கும் பணியில் மீனவர்கள் சிலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய மாற்று பாதையில் நல்ல ஆழமான சூழல் இருப்பதால் பெரிய அளவிலான கப்பல்கள் வந்து செல்ல வசதியாக இருக்கும் என கூறப்படுகிறது.

இது சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து சேது சமுத்திரம் திட்டத்தின் மாற்றுப் பாதை ஆய்வுகளை கவனிக்க திட்டமிட்டுள்ளது. இதற்கு தங்கள் வசமுள்ள இலங்கை கடற்படையின் பிரத்தியேக உதவி அந்நாட்டுக்கு கைகொடுத்துள்ளது.


இதனால் சமீபகாலமாக இலங்கை கடற்படை இந்திய எல்லையில் நுழையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்திய கடற்படைக்கும் இத்தகவல் கசியத் தொடங்கியிருப்பதால் அவர்களும் உஷார் நிலையில் உள்ளனர்.

இதுகுறித்து மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லபட்டதாகவும் அதனாலேயே தனுஷ்கோடி ஐந்தாம் மணல் திட்டில் இந்திய எல்லை பலகை வைக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கச்சதீவை தொடர்ந்து சேது சமுத்திரம் திட்டத்திலும் சீனா தலையிடுவது மாற்று பாதை ஆய்வில் இன்னும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். (ஓ-6)

# நடிகர் கவுண்டமணி மருத்துவமனையில் அனுமதி

(சென்னை)



திடீர் மூச்சுத்திணறல் காரணமாக நடிகர் கவுண்டமணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் பட உலகில் கொடிகட்டி பறந்த நகைச்சுவை நடிகர்களில் கவுண்டமணியும் ஒருவர். கவுண்டமணி – செந்தில் இணைந்து நடித்த வாழைப்பழ நகைச்சுவை இன்று வரை ரசிகர்களை சிரிக்க சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

மார்க்கெட் உச்சத்தில் இருந்த போதே கவுண்டமணி படங்களில் நடிப்பதை குறைத்துக் கொண்டார். அதற்கு அவருக்கு இருந்து வரும் சர்க்கரை நோயும் ஒரு காரணம்.

நீண்ட ,இடைவெளிக்குப்பின் அவர், சரத்குமார் கதாநாயகனாக நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த 'ஜக்குபாய்' படத்தில் நடித்து இருந்தார்.

கடந்த சில நாட்களாக அவர் கழுத்து வலியால் அவதிப்பட்டு வந்தார். இதற்காக கழுத்துப்பட்டை அணிந்து இருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவருக்கு திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக அவரை சென்னை தேனாம்பேட்டையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். (ஓ-6)

# கேரளாவில் தமிழக சிறுவர்கள் இருவர் அடித்துக் கொலை

(திருவனந்தபுரம்)


திருநெல்வேலி அருகே உள்ள சிவகிரி தேவிப்பட்டணத்தை சேர்ந்தவர் ஆரோக்கியம். இவருடைய மனைவி வெர்ஜீனியா ராணி. இவர்களுக்கு மலர் திரேசா, டொமினிக் (வயது 9) என்ற 2 குழந்தைகள் உள்ளனர்.

ஆரோக்கியம் குடும்பத்துடன் திருவனந்தபுரம் ஆற்றுக்கால் அருகே வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கி, முறுக்கு உள்ளிட்ட பலகாரங்கள் தயாரித்து விற்பனை செய்துவந்தனர். இவர்களுடன் தொழிலாளர்களான கார்த்திக் (16), செல்வராஜ் (14) ஆகியோரும் தங்கியிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரோக்கியமும், வெர்ஜீனியாவும் உறவினர் வீட்டிற்குச் சென்றனர். திரேசா மட்டும் பக்கத்து வீட்டில் தங்கியிருந்தாள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலையில் டொமினிக், கார்த்திக் ஆகிய 2 பேரும் மர்மமான முறையில் தாக்கப்பட்டு பிணமாக கிடந்தனர். அவர்களுடன் தங்கியிருந்த சிறுவன் செல்வராஜை காணவில்லை.

இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஓ-6)



ஆவரங்காலில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், வேட்பாளர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவஞானம் சிறீதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் வேட்பாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# டில்லி டேர்டேவில்ஸ் அணியை இலகுவாக வென்றது மும்பை

டெண்டுல்கர், திவாரியின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது -20 கிரிக்கெட் தொடரில் நேற்று டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 9ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர்டேவில்ஸ் அணித் தலைவர் காம்பீர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி டெண்டுல்கர், திவாரியின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 218 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 32 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களையும் திவாரி 37 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 61 ஓட்டங்களையும் நாயுடு 21 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 34 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் மகரூப், லாட்டா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாங்கவான், மிஸ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 219 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 16.3 ஓவர்களில் 120 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் மகரூப் 18 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 28 ஓட்டங்களையும் சேவாக் 16 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெயசூரிய, ஹர்பஜன்சிங் மற்றும் பிராவோ ஆகியோர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, பொல்லாட் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர் இப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு 'அடித்தளம் அமைந்த அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டநாயகனாகத் தெரிவானர்.

இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று நாலு புள்ளிகளைப் பெற்றது.

இதேவேளை டில்லி டேர்டேவில்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் முதலாவது தோல்வியைச் சந்தித்தது.


## விளையாட்டுப்போட்டி

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியால்ய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ்.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல் கலந்து கொள்ளவுள்ளார். (ச-5)

## இறுவட்டு வெளியீட்டுவிழா

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் மீது தென்னிந்தியப் பின்னணிப் பாடகர்களான வீரமணிராஜ், தீபச்சக்கரவர்த்தி, கிருஸ்ணராஜ், முகேஸ் ஆகியோர் பாடிய "கோபுர தரிசனம்" சிவகாமி அம்பாள் கும்பாபிஷேக கீர்த்தனை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை நண்கல் 12 மணிக்கு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறும். (14)



வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் சைக்களை வழங்குவதையும் அருகில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வடமாகாண கல்வி அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நந்தகுமார் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

*படங்கள்:வர்ணவி*

# சமஷ்டி அதிகாரப் பகிர்வு கிடைத்திருந்தால்...

கலாசாரம், தேசியம், வரலாறுகளைக் கொண்ட ஓர் தேசிய இனம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. நாம் வடக்குக் கிழக்கில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்திருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கு எல்லா மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது. மக்கள் எமக்குப் பின் பலமாக உள்ளனர்.

மிகவும் அதிகளவான ஆசனத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில்நாம் கைப்பற்றுவோம். இந்தத் தேர்தல் முக்கியமான கால கட்டத்தில் இடம்பெறுகின்றது.

30 ஆண்டு காலமாக ஆயுதப் போராட்டம் இடம்பெற்று கடந்த தேர்தல் நடைபெற்ற வேளை யுத்தம் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு தேர்தலுக்குப்பின் யுத்தம் வெடித்தது.

இன்றைய அமைதிச் சூழலை பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என சர்வதேசம் வலியுறுத்தி வருகின்றது.

ஓர் நிரந்தரமான நடைமுறைப்படுத்தக் கூடிய தீர்வை விட்டுக்கொடுக்காமல் பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

பொதுத் தேர்தல் முடிபடைந்த பின் தமிழ் தலைவர்களுடன் பேசுவதாக ஜனாதிபதி கூறுகின்றார். தமிழ்த் தலைவர்கள் யார் என்கிற கருத்தை நீங்கள் தீர்மானிக வேண்டும்.

அரசாங்கம் யாழ். மாவட்டத்தில் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பலத்தை சிதறடிப்பதற்காக வெளிநாட்டில் இருந்து வந்தவர்களை தேர்தல் களத்தில் இறக்கி நிதிகளை வழங்கி களத்தில் இறக்கியுள்ளது.

இவர்கள் மூலம் ஓரிரு ஆசனங்களைப் பெற்று தமக்கு ஆதரவுள்ளது என அரசாங்கம் வெளிப்படுத்த விரும்புகின்றது.

18வருடங்களாக வடக்கு கிழக்கு இணைப்பு நீடித்து வந்தது. 18 வருடத்திற்குப் பின் உச்சநீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மகிந்த ராஜபக்ஷ வடக்குக் கிழக்கை துண்டித்தார்.

வடக்குக் கிழக்கை துண்டித்த ஆளும் கட்சிக்கு யாழ் .மாவட்டத்தில் இடம்கொடுக்காதீர்கள். வடமாகாணத்தின் தலைநகராக மாங்குளத்தை அமைக்க முயற்சிக்கின்றார்கள்.

வன்னியில் பொலிஸ்நிலையத்திற்கு 50 ஏக்கர், இராணுவ முகாமிற்கு 100 ஏக்கர் என நிலங்களை பறித்தெடுக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தை விழுங்குவதற்கு முயற்சிக்கிறார்கள்.

எனவே எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் 95 வீதம் வாக்களிக்க வேண்டும்.

ஆளும் கட்சிக்குச் செல்லகின்ற வாக்குகள் தடுக்கப்பட்டு தமிழரின் பலத்தை நிரூபித்துக்காட்ட வேண்டும் என இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ச-7)

# இலங்கையின் எதிர்ப்பை...

இலங்கை தொடர்பிலான நிபுணர்கள் குழு நியமிப்பதற்கான பூரண அதிகாரம் காணப்படுகின்றது. எனது அதிகாரங்களை மீறி ஐ.நா. செயற்படுவதாக அணிசேரா நாடுகள் அமைப்பு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசேட நிபுணர்கள் குழுவினர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கவுள்ளனர்.

நிபுணர் குழுவொன்றை ஐ.நா செயலாளர் பான் கீ மூன் நியமிக்கவுள்ளதாக அறிவித்ததையடுத்து அந்நியமனம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் இந்த நடவடிக்கை எதிர்வரும் பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் எனவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி செயலகம் கடந்த 6 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் தாம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இரு தரப்புக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே நிபுணர்கள் குழு நியமிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்கள் குறித்த விசாரணைகளுக்கான நியமங்கள், சட்ட திட்டங்கள் போன்றவை தொடர்பில் நிபுணர்கள் குழு தமக்கு ஆலோசனை வழங்குவார்கள் என தெரிவித்த அவர் இந்த நடவடிக்கை இலங்கையின் இறையாண்மையை எந்தவகையிலும் பாதிக்காது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு மன்னிப்புச் சபைக்கு அரசு சவால்

அரசாங்கத்தை விமர்சிக்கும் முன்னணி ஊடவியலாளர்கள் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளடங்கிய 35 பேரின் பட்டியலை இலங்கை புலனாய்வுப் பிரிவு வைத்திருப்பதாக நம்பப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கும் நிலையில் அந்தப் பட்டியலானது உண்மையாக இருக்குமானால் அதனை சர்வதேச மன்னிப்புச்சபை பகிரங்கப்படுத்த வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு சவால் விடுத்துள்ளது.

கடந்த 4 வருடங்களாக அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேசமன்னிப்புச்சபை போன்ற அமைப்புக்கள் இந்தமாதிரியான குற்றச்சாட்டுக்களைத் தொடுத்துவருவதாக பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல டெய்லிமிரர் இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தைத் தோற்கடித்த நாடாக இலங்கை உள்ளது. ஏனென்னில் அதனைச்செய்வதற்கான சக்திஎம்மிடம் இருந்தது. இதனால் அதிகளவிற்கு சில அமைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேசமன்னிப்புச்சபையும் அதிலொன்றாக இருக்கக் கூடும் என்றார். (ச-5)

## தேடப்படு...

சமரின் போது கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் இன்ரபோல் அமைப்பு தனது தேடுவோர் பட்டியலில் பொட்டு அம்மான் மற்றும் அவரின் இரண்டு உதவியாளர்கள் ஆகியோரின் பெயர்களை இணைத்து வெளியிட்டுள்ளது.

சிவப்பு எச்சரிக்கை கொண்ட பகுதியில் அவரின் பெயர் இடம் பெற்றுள்ளது. இன்ரபோலின் இந்த அறிவிப்பானது இலங்கை அரசின் முன்னைய கூற்றுக்களில் ஏற்பட்ட மாற்றமாகவே கருதப்படுகின்றது.

பொட்டு அம்மானின் இறப்புச் சான்றிதழை அரசு வழங்காததால் அது மீண்டும் இன்ரபோலின் பட்டியலில் இணைக் கப்பட்டுள்ளதாக-அரச தரப்பு தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## பிரதம...

சட்டத்தரணிகள் கருத்தரங்கை ஆரம்பித்து வைக்கும் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா நண்பகல் நெடுந்தீவில் சுற்றுலா நீதிமன்றை திறந்து வைக்கின்றார்.

அத்துடன் பிற்பகல் 5 மணிக்கு யாழ். நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் சிரேஷ்ட சட்டத்தரணி கனகரத்தினத்தின் படத்தை பிரதம நீதியரசர் திரை நீக்கி வைக்கிறார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை பிரதம நீதியரசர் தலைமையிலான குழுவினர் நல்லூர் கந்தசாமிகோவிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவர்.

தொடர்ந்துமல்லாகம், சாவகச்சேரி நீதி மன்றங்களுக்காக அமைக்கப்படவுள்ளபுதிய கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல்லை பிரதம நீதியரசர் நாட்டி வைக்கிறார். அத்துடன் யாழ். மாவட்ட நீதிபதிகள் ஏற்பாடுசெய்துள்ள இரவு போசனத்திலும் கலந்து கொள்கிறார்.

மறு நாள் திங்கட்கிழமை கீரிமலைக்குச் செல்லும் பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர் குழு யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டுகொழும்புக்குப் புறப்படுவர். (ச-5)

## பொன்சேகா மீதான உறவது...

குழு தெரிவித்ததாக பொன் சேகா சார்பாக வாதிடும் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்துக்கு ஆயுதக் கொள்வனவு செய்வது தொடர்பான விதிகளை பொன் சேகா சார்பாக வாதிடும் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்துக்கு ஆயுதக் கொள்வனவு செய்வது தொடர்பான விதிகளை பொன் சேகா மீறியிருந்தார் என்பது தொடர்பான நேற்றைய வழக்கு குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுவதற்காக முன்பே காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் போதே அரசியல் வேலைகளில் ஈடுபட்டார் என்பது தொடர்பான முதல்வழக்கு நீதிபதிகள் குழுவில் இடம் பெற்றவர்கள் தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்து ஏப்ரல் 6ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-5,9)

## ஜனாதிபதி...

பதால் என்மீது பொறாமை கொண்டுள்ளார். அது மட்டுமல்லா மல் என்னை சட்டத்திற்கு முரணாக தடுத்து வைத்துள்ளனர். ஆனாலும் நான் ஒரு போதும் இக் கொடுமையான ஏமாற்றுக்காரர் ஜனாதிபதியை நாட்டின் நன்மை கருதி வெளிப்படுத்துவதை கைவிடமாட்டேன். ஜனாதிபதியின் நடவடிக்கைகள் இடிஅமீன் போல் உள்ளது எனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ச-5)


DIPLOMA IN ENGLISH
Grammar, Speaking & Pronunciations, Reading, Listening, Writing, Vocabulary..etc
SPOKEN ENGLISH
இலங்கையில் முதன்முறையாக நாம் மட்டுமே சர்வதேச தரம் வாய்ந்த (ISO Certified) சான்றிதழ் வழங்குகின்றோம்.
Free handouts & cd பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.
அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் Computer,Online மூலமாக ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்
INTERNATIONALCITY COLLEGE
NO 21, Stanly Road (People bank Lane), Jaffna Tel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com.
T.P:-0776642432, 0774 032 051



பாராளுமன்றப் பொது தேர்தல் 2010

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாமனிதர் நடராஜா ரவிராஜ், மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம், மாமனிதர் சிவநேசன் போன்ற பலர் தமிழ் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் விடுதலைப் பயணத்திலேயே படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்காகவே பல் ஆயிரம் எமது உடன் பிறப்புக்கள் தங்கள் உயிர்களை உடலை பெறுமதி மிக்க வாழ்க்கையை விடுதலைப் போராட்டத்தில் தியாகஞ் செய்துள்ளார்கள். இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களை வார்த்தைகளில் வடிக்கமுடியாது. இந்தத் தியாகங்கள் அனைத்துக்குமாக ஒரு அர்த்தம் உள்ள உருப்படியான தீர்வு எட்டப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறி 2004ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்கு பெற்ற த.தே.கூட்டமைப்பு தலைமை இப்போது தமிழீழ விடுதலைப்புலிகளை தாங்கள் ஒருபோதும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க வில்லை என்று கூறுவருகின்றது. இதனை ஆரம்பத்தில் இருந்தே திரைமறைவில் சர்வதேச இராஜதந்திரிகளுக்கும், ஏனையவர்களுக்கும் மறைமுகமாக கூறிவந்த கூட்டமைப்பு தலைமை 2009 மே 19 பின்னர் வெளிப்படையாக கூறிவருகின்றது. இதுவே முள்ளிவாய்க்கால் வரையான தமிழின அழிப்பை நியாயப்படுத்தியது. இந்த விடயத்தில் கூட்டமைப்புத் தலைமையின் நிலைப்பாட்டிற்கும் எம்மை அழித்த தென்னிலங்கை சிங்களத் தலைமைகளின் நிலைப்பாட்டிற்கும் எந்த வேறுபாடும் கிடையாது.

தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய அடிப்படை கொள்கைகளை கைவிட்டு தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ள கூட்டமைப்புத் தலைமை, தமிழர்களின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு மேற் குறித்த அடிப்படைக் கொள்கைகளிலேயே காணப்படும் என்று எம் மக்களுக்கு கூறுவருகின்றது. இது தமிழ் மக்களிடம் வாக்குகளை பெறுவதற்காக தமிழ் கூட்டமைப்பு கைக் கொள்ளும் தந்திரோபாயம்.

தமிழ் தேசியத்தினை பாதுகாப்பதற்கு தமிழ்த்தேசியத்தினை நேசிக்கின்ற இளைஞர்கள், கல்வி மான்கள், பெரியோர்கள் எனது பாடசாலை மற்றும் பல்கலைக்கழக, உயர்கல்வி நிறுவன, அரச திணைக்கள, நண்பர்களையும் ஆதரவு வழங்குமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.





தொடர்புக்கு: 0718246490

செ.கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

X 12

(627)



பாராளுமன்ற தேர்தல்
08-04-2010





“உங்கள் வாக்கை எனக்களித்து என்னை வெற்றிபெறச் செய்திடுவீர்.”

சா.சத்தியேந்திரா...
ஐக்கிய தேசியக்கட்சி
யாழ். மாவட்ட
பிரதான அமைப்பாளர்

11X X

மானிப்பாய் தேர்தல் தொகுதி
வாக்காளப் பெருமக்கள்

(640)



பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010
யாழ்.மாவட்டம்

★ அசைக்க முடியாத தமிழ்ப் பற்றும் ★ சமச்சீரான சமூக நோக்கமும்
★ எவருக்கும் அடிமைப்படாத மன உறுதியும்
★ அப்பழுக்கற்ற அயராத சேவையும் கொண்ட

ஆ.ந.இராசேந்திரன்
(Dip.in Accg, APFA, AMA, FMAAT.)
(சிரேஷ்ட கணக்காளர், முன்னைநாட் தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபை)

அவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்வோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X X

யூனியன் கல்லூரி
பழைய மாணவர்கள்

(சி-4593)





பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

வலி தந்தாரை தோற்கடிப்போம்-நம்
விதி வெல்ல வாக்களிப்போம்

X
10 X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிவஞானம் சிறீதரன்

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரர்) அதிபர்

(சி-4594)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.